உ

சிவமயம்

# இராம நாதம்



யாழ்ப்பாணம் கொக்குவில்

உயர்சைவ வேளான் குலத்தோன்றல்

அமரர்

## திரு. கந்தையா இராமநாதன் JP அவர்கள்

23 ஆம் நாள் ஆனித்திங்கள் 2006.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கருத்தன எந்தைதன், கண்ணன,
வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு
நல்கின, பேர்அருள்கூர்
திருத்தன பாரமும்; ஆரமும்
செங்கைச் சிலையும், அம்பும்
முருத்துஅன மூரலும், நீயும்அம்மே!
வந்துஎன் முன்நிற்கவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துஉனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம் :- 29-11-1921

நிறைவு :- 24-05-2006 வியவ வருஷம்
வைகாசித்திங்கள் 10ம் நாள் (புதன்கிழமை)
அமரபட்ச துவாதசி திதி
(தேய்பிறை பௌர்ணமியின் பின்)
ரேவதி நட்சத்திரம்

அந்தியேட்டி :- முகத்துவாரமடம்

வீட்டுக்கிருத்தியம்:- 23-06-2006 வெள்ளிக்கிழமை (இல்லத்தில்)
45/23A பிறற்றிக்கா றோட்,
வெள்ளவத்தை.

ஆத்மசாந்திப் பிரார்த்தனை :- 25-06-2006 ஞாயிற்றுக்கிழமை
லோறன்ஸ் வீதி பம்பலபிட்டி
சரஸ்வதி மண்டபம்.

* *

ஆற்றாது
அழுத கண்ணீர்
தேற்றாது
விம்முகின்றோம்
மேதினியில்
மாண்டார் மீள்வதில்லை
நியதி இதுவெனிலும்
மாறாது
நின் தியாக வாழ்வின்
நினைவலைகள்.............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



எங்களுக்கு எல்லாமாய்,

எல்லோருக்கும் ஏணியாய்,

கற்பகத்தாள் காவலனாய்,

கனதி பெற்ற கற்பக தருவுக்கு,

காணிக்கை.

**மனைவி, மக்கள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்


# அமரர்
# உயர்திரு கந்தையா இராமநாதன் JP
# அவர்கள்

மலர்வு

29

11

1921



உதிர்வு

24

05

2006

## திதிநிர்ணய வெண்பா

வியவருஷ வைகாசிப்பத்தில் விதிமயங்க
மதிதேயவரு துவாதசி நாள் - செய்ய
திருமேனிச் செயல் வண்ணன் இராமநாதன்
தருமநெறி காத்துப் புகுந்தார் சிவன்கழலே

பூமியில் உன்வாழ்நாள் நீடித்திட உன் தந்தையையும்,
தாயையும் கனம் பண்ணுவாயாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# விநாயகர் துதி



திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவார்தம் கை.

## தேவாரம்

மங்கையற்கரசி வளவர் கோன்பாவை
வரிவளைக்கை மட மானி
பங்கையற் செல்வி பாண்டிமாதேவி
பணி செய்து நாள் தோறும்பரவ
பொங்கழலுரவன் உரவம் பூதநாயகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கையர் கண்ணி தன்னோடும் அமர்ந்த
ஆலவ்வாயாவது மிதுவே.

பிள்ளை என்றாலே மகன்தாள். பிள்ளையார் என்றால் தலைசிறந்த மகன். பிள்ளைகட்கெல்லாம் பிள்ளை. மூத்த மகன் எனப் பொருள்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோன்
அடியோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தருள
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொடவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகெட சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு அருட்பா

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்க வேண்டும்உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட்ட டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

## அபிராமியம்மை பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும்
கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்!
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம்நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன
இப்போழுது என்னை ஆட்கொள்ள வேண்டி
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்து
திருந்திய முதல்ஐந் தெழுத்துத் தெளிவாய்
பொருந்தவே எந்தன் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயத் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைத்தான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்ட உபதேசம் புகட்டிஎன் செவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தறி வித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனை காபலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியின்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்து
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரனே.

(விநாயகர் அகவல் முற்றிற்று)



வீட்டின் படி, நடை கூடம் வீட்டின் முதலில் இருப்பது படி அது நம்மை படிகடக வேண்டும் எனக் கூறுகிறது. அடுத்து நடை நாம் படித்தபடி நடக்க வேண்டும் என்று சொல்லுகிறது. அடுத்து கூடம் அது கூடி வாழ வேண்டும் என அறிவுறுத்துகிறது. பக்கத்தில் முற்றம் இலட்சியம் முற்றுப் பெற்றால் மோட்சம் கிட்டும். இதுவே வீடு பேறு என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீராம நாமம் சொல்ல

ஸ்ரீராம நாமம் சொல்ல
ஸ்ரீ ஆஞ்ச நேயன் உள்ளம்
ஆனந்த கூத்தாடுமே
பக்தர் கொண்ட
துன்பங்கள் தூசாகுமே (ஸ்ரீராம நாமம்)

சீதாவின் ஸ்ரீராமன்
பெயரன்றி வேறேது
அனுமானின் திருவாயில்
வேறொன்றும் வராது
செய்கின்ற செயலெல்லாம்
ஸ்ரீராமன் என்றாகும்
புரிகின்ற தொண்டெல்லாம்
ஸ்ரீராம தொண்டாகும் (ஸ்ரீராம நாமம்)

வைகுண்டம் வாவென்று
ஸ்ரீராமன் அழைத்தாரே
மண் வாழ்வில் உன் சேவை
என் பாக்யம் என்றாரே
ஸ்ரீ தேவி வாக்காக
சிரஞ்சீவி ஆனாரே
சஞ்சீவி மலை சுமந்து
சஞ்சீவி ஆனாரே (ஸ்ரீராம நாமம்)

சங்கம் : இதுவும் விஷ்ணுவுக்குரிய சிறந்த ஆயுதம் வெற்றியை அறிவிக்கும் கருவி. பகைவர்களை இதன் ஒலிகேட்டதுமே ஒடுங்கி அடங்கச்செய்யும் அச்சக்கருவியுமாம். இதிலும் பல வடிவங்கள் உள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து

# மனோன்மணியம்மை பேரில்

பாடிய

# திரு ஊஞ்சல்

## காப்பு

சீரேறு செம்பதும மலரில் ஏறும்
திருவேறு மார்பனுடன் அயனும் தேடும்
தாரேறு கொன்றைமலர் முடியி லேறச்
சங்கவெண் குழைதோடு பொலிந்தே யேற
ஏரேறு கொக்குவிற் கற்புலத்தில் மேயும்
எழிலேறு மனோன்மணிமேல் ஊஞ்சல் பாட
காரேறு மங்குசத்தி னோடு பாசம்
கரத்தேறு கணபதிதாள் கருத்துள் வைப்பாம்.

## நூல்

கொண்டல்வளர் கனகவரை விட்ட மாகக்
குலவுகுலா சலங்கள் மணிக் கால்களாக
பண்டைமறை யொரு நான்கும் கயிறதாகப்
பலபுவனக் கோடிகள் பொற் பலகையாக
அண்டர்நடு அமரர்கோன் பதியே நல்ல
அரிகொள்நவ ரத்தினமணி பீட மாக
மண்டல மெலாம்புகழ் கற்புலத்தில் மேவும்.
மாதுமையாம் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல்

நல்லார் ஒருவர்க்கு செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீத்த உபகாரம் நீர்மேல்
எழுத்திற்கு நேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுலவு மிருசுடர்கள் தீப மாக
விளங்குபல தாரகைகள் விதான மாக
தண்ணுலவு சந்தான முதலா வைந்து
தனமலர்கள் நறுமலர்ப்பூம் பந்த ராக
எண்ணுலவு மிளந்தென்றல் கவரி யாக
இலங்குபகி ரண்டமணி மஞ்ச மாக
அண்ணல்வளந் திகழ்தரு கற்புலத்தில் வாழும்
அம்மையாம் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல்

செய்யவெண் டாமரைமல ரிந்திரை சீர்வாணி
செகமுழுது நிழற்றுவெள்ளைக் கவிகை கொள்ள
துய்யபகீரதி தவளக் கவரி வீசத்
தோகை அயிராணி செம்பொற் படிகமேந்த
ஐயைபயி ரவிமுதலோர் அடைப்பை தாங்க
அஞ்சுகமும் குயில்கூவ மஞ்ஞை யாட
பெய்யுமுகில் வளர் சோலைக் கற்புலத்தின்
பெண்ணரசி மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல்

தகரமணங் கமழ்மணிபொன் மவுலி மின்ன
சசிகலைகள் மானுநெற்றி அணிகள் துன்ன
மகரவனி குண்டலத் தோடிகலி நீல
வரிக்கயல்கள் பாய்கழனி ஆம்பல் மேவ
நிகரில்லா மைந்தர்கள் நியப்பூ வார
நிரைவட முத்தரி மிசைநிழல்கள் வீச
புகரில்மறை தேடுகின்ற கற்புலம் சேர்
பொற்பதிவாழ் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல்

**வலம்புரி சங்கு**

வலம்புரி சங்கில் குபேரன் நிரந்தர வாசம் செய்கிறார். வலம்புரி சங்கை வீட்டில் வைத்து பூசித்து வந்தால் வீட்டின் வலிமை அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்புரு நாரதர் முதலோர் கீதம்பாட
துய்ய உடுப்பசி முதலோர் நடனமாட
அம்பரமே லவர்பாரி சாத மேவு
மலர்மழை பொன்மழைபோல மகிழ்ந்து வீச
செம்பதுமக் கன்னியொடு நாவு மாதும்
திகழுமிரு கரத்தாலும் வடந்தொட் டாட்ட
அம்புவியில் வளம்மிகும் கற்புலத்தில் வாழும்
அம்மையாம் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல்

மந்திரமே முதலான ஆதி தேவர்
மன்றில் நடராசரன்பர் மனதில் வாச
சிந்தையு வந்தினி திருக்கும் வானுலாவும்
திங்கள் வேறெனத் திகழகிம்புருடர் ஒன்றைத்
தந்தனுடன் கந்தன்மடி மிசையே மேவ
சகலவுயிர்களுமே வாழ்க தரையோ ருய்யச்
செந்திருவாழ் கொக்குவிற் கற்புலத்தில் மேவும்
தேவிஉமா மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல்

கதிரொரு மணியணி குண்டலங்க ளாடக்
கனகபணி யணிவளைகொள் கவின்க ளாட
புதிதான கொன்றையணிக் குஞ்ச மாட
பொற்றருவின் மலர்மாலை பொலிந்தே யாட
மதிபோலு நுதலிலணி சுட்டி யாட
வசைமல ரடிணைகள் சிலம்பு மாட
அதிகவனக் கொக்குவிற் கற்புலத்தில் வாழும்
அம்மையாம் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல்

நல்லாரைக் காண்பதும் நன்றே நலமிக்க நல்லார்
சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார் அவரோடு
குணங்கள் உரைப்பதுவும் நன்றே இணங்கி
இருப்பதுவும் நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவர்முதலாம் ஊருத்திரர் பண்ணவர்கள் மூன்று
பத்துடனே முக்கோடி பதுமன் மாலோர்
இவர்களுடன் இந்திரனக் கினியோன் காலன்
இனியகூர் மாண்டனுடன் ஆட கேசன்
தவர்களுமா கமங்கள் சதுர்வேத மோத
சதகோடி சக்திகளும் பாங்கின் மேவ
அவனிபுகழ் கொக்குவிற் கற்புலத்தில் வாழும்
அபிராமி மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல்

உரகபதி நகரெட்டுங் கால்க ளாக
ஒங்குபுவி தவிசிருப்ப உம்பர் மேலா
விரவுமொரு விதானமா யுடுங்கள் பூவாய்
விதுவுடனே கதிர்களொளி யாடி யாக
பொருவிலகி லாண்ட நிறை மன்றமாக
பொருந்தி உயிர் பரந்தருளு மன்னர் மன்னன்
வரைமகளாம் கொக்குவிற் கற்புலத்தில் மேவும்
மாதுமையாம் மனோன்மணியே ஆடீர்ஊஞ்சல்

சங்கரர்தம் இருகருணை விழிகள் வாழி
சாரும்அருட் சிவகாமி வல்லி வாழி
பொங்குகடல் சூழ்வாயிற் புலவர் வாழி
பூசுரரும் கோவினமும் பொலிந்து வாழி
ஐங்கரரோ டருஞ்ஷேத்ர பாலர் வாழி
அரசர்கோன் முறை வாழி அமரர் வாழி
திங்கள்முகில் மும்மாரி பொழிந்து வாழி
செகம்புகழ் கொக்குவில் நகரம் சிறந்துவாழி.

**மனோன்மணியே ஊஞ்சல் முற்றும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப மங்களம்

பூரணி பராதனிக்கு ஜயமங்களம் - சுப
புவனேஸ்வரி யம்மைக்கு சுபமங்களம்
நாராயணியாம் நந்தினிக்கு ஜெயமங்களம் - சுப
நாகேஸ்வரித் தேவிக்கு சுபமங்களம்.

தாட்சாயணி யம்மைக்கு ஜெயமங்களம் - சுப
தாரணி உமாதேவிக்கு சுபமங்களம்
மோட்சமருள் மோகினிக்கு ஜயமங்களம் - சுப
மாலினி மனோன்மணிக்கு சுபமங்களம்

பார்வதி பரஞ்சோதிக்கு ஜயமங்களம் - சுப
பரமேஸ்வரி அம்மைக்கு சுபமங்களம்
கார்குழற் கற்புலத் தாய்க்கு ஜெயமங்களம் - சுப
கருணாகரி யம்மைக்கு சுபமங்களம்.

திக்கு எட்டுப் பாலகர்க்கு ஜயமங்களம்
தீன தயாபரிக்கு சுபமங்களம்
கொக்குவில் கற்புலத்து தாய்க்கு சுபமங்களம்
கோதை மனோன்மணி அம்மைக்கு சுபமங்களம்.

கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் நினைவில் கொள்ளாது நிகழ்காலத்திலேயே வாழப்பழகிக் கொள்ளுங்கள் வருங்காலம் தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும்

- சுவாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வாழ்க்கை வரலாறு

உயர்திரு கந்தையா இராமநாதன் அவர்கள் யாழ்ப்பாணத்தின் புகழ்மிக்க ஊர்களில் ஒன்றான கொக்குவில் கிராமத்தின் உயர் வேளாள குலத்தில் வல்லிபுரம் கந்தையா, வேலுப்பிள்ளை முத்தம்மா தம்பதிகளின் அருந்தவப் புதல்வனாக 29-11-1921ம் தினத்தில் பிறந்தார்.

குமாரசாமி, வல்லிபுரம், சரஸ்வதி என மூன்று சகோதர சகோதரி களை பெற்ற இராமநாதன் இளம்பராயத்திலேயே சிறந்த கல்வி ஆர்வமும், ஆளுமைத்திறனும் நிறைந்திருந்த இராமநாதன் அவர்களது பாடசாலைக் கல்வி கில்னர் பாடசாலை, திருநெல் வேலி பரமேஸ்வராக் கல்லூரி, (பின்னாளிலே யாழ் வளாகமாக மாற்றப்பட்டது) யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி என்னும் புகழ்பெற்ற கல்விக் கூடங்களில் அமைந்தது. தமது கல்விச் சிறப்பின் காரணமாக பொது வேலைகள் திணைக்களத்தில் ஓவசியராக பணியில் அமர்ந்தார்.

ஏற்றமிகு வாழ்வின் மற்றுமொரு படிக்கல்லாக கோண்டாவில் கிராமத்தின் புகழ் பெற்ற மயில்வாகனம் சின்னம்மா குடும்பத்தி லிருந்து செல்வராணி அவர்களை 20-10-1947ல் தமது இல்வாழ்வில் இணைத்துக் கொண்டு நல்லறவாழ்வினைத் தொடர்ந்தார் இராமநாதன் அவர்கள். மணவாழ்வின் பெரும் பேறாக ஸ்ரீ இராமநாதன், உருத்திரா, நவீந்திரா, மகின்தா, குகன், அசோகன் என்ற ஆறு ஆண்புத்திரர் களையும் நீற்ரா, ரூபா, றெஜினா என மூன்று புத்திரிகளையும் இராமநாதன் தம்பதியினர் பெற்றெடுத்து சீரும் சிறப்புமாக வளர்த்து கல்வியில் மேன்மையுறச் செய்தனர். எல்லாப்பிள்ளைகளுக்கும் சிறப்பான மணவாழ்வை அமைத்து மஞ்சுளா, அமுதசாகரன், நாகேஸ்வரி, ஜெயமலர், சிவநேசன், புவனநாயகம், குவாண்டலீன், ஷீலா, சுவர்ணலதா என்னும் நன் மருமக்களையும் பெற்று மகிழ்ந்தனர். அமரரது பெயர் சொல்லும் விதமாக எல்லா பிள்ளைகளும், மருமக்களும் சிறந்த பதவி நிலைகளில் இன்று மிளிர்கின்றனர். கடல் கடந்து வாழ்ந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது தாய், தந்தை, மாமன், மாமி ஆகியோரது பாரம்பரியமும், புகழும் எவ்வகையிலும் குறைவடையா வண்ணம் அன்னாரது பரம்பரை தழைத்து சிறந்து விளைந்திருப்பதனை 20 பேரச் செல்வங்கள், 1 பூட்டப்பிள்ளையினதும் பெறுபேறுகளிலிருந்து அறியக்கிடைக்கின்றது.

தொழில் ரீதியாக படிப்படியாக உயர்ந்த இராமநாதன் அவர்கள் சிகிரியா, பசறை, கொழும்பு, மொறட்டுவ என நாட்டின் பல்வேறு பாகங்களிலும் சேவைபுரிந்து இறுதியாக பெருந்தெருக்கள் அமைச்சில் சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமை யாற்றி ஓய்வு பெற்றார்.

இளமைக்காலம் முதலே மனிதகாருண்யமும் சமூக அக்கறையும் உடையவராக வளர்ந்த இராமநாதன் அவர்களது சமூக, சமய, கலாச்சார பணிகள் எண்ணிலடங்காதவை, தாம் பணியாற்றிய, வாழ்ந்த சகல பிராந்தியங்களிலும் தன்நலம் கருதாது பொதுச் சேவைகளை ஆற்றிய அமரர் அவர்கள் தாம் பிறந்த மண்ணான கொக்குவில் புகுந்த மண்ணான கோண்டாவில் இரண்டையும் தம் இரு கண்களாகக் கொண்டு தன் இறுதி நாள் வரை இடையறாத பணிகளை இக் கிராமங்களது சமய, சமூக மேம்பாடுகளுக்காக அயராது புரிந்து வந்தார். அமரரது பணிகளில் குறிப்பிடத்தக்க சில பின்வருமாறு.

- பசறையில் சிங்களப் பாடசாலையில் இணைந்து இயங்கி வந்த தமிழ்ப் பாடசாலையைத் தனித்தமிழ் பாடசாலையாக இயக்குவதற்கு முன்னின்று உழைத்தமை.
- பதுளையில் சைவபரிபாலனசபையின் உப தலைவர்.
- பதுளை இந்துக் கல்லூரியின் ஆரம்ப உறுப்பினர் (தற்பொழுது சரஸ்வதி மகா வித்தியாலயம்).
- வத்தளை இந்து மாமன்றத்தலைவர்.
- கொழும்பு இந்துக்கல்லூரி அபிவிருத்திச்சபை செயலாளர் (1971 - 1973).
- கோண்டாவில் இராமகிருஷ்ணமிசன் பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர்.
- கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலைய ஆரம்ப உறுப்பினரும் போசகரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொக்குவில் வளர்மதி நிறைவாழ்வகப் போஷகர்.
- நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாளின் பரிபாலன சபை தர்மகர்த்தாவாகவும் தொடர்ந்து 1993ம் ஆண்டு முதல் இறுதிவரை ஆலய பரிபாலனசபைத் தலைவராகவும் ஆலயத்திருப்பணி வேலைகளான வசந்த மண்டபத்தை தனது உபயமாகவும், தேர், கோபுரம் கட்டிடப்புனர்நிர்மாணம் போன்றவற்றையும் சிறப்புற நிறைவு செய்வதற்கு முன்னின்று ஆலோசனைகளையும் பண உதவிகளையும் வழங்கியமை.

கொக்குவில் கிழக்கு மற்றும் கோண்டாவில் மக்களிடையே அமோக அபிமானத்தைப் பெற்று விளங்கிய அமரர் அவர்கள் 1977ம் ஆண்டில் இடம்பெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலிலும் நல்லூர் தொகுதியில் ஒரு சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வடகிழக்கெங்கும் அரசியல் ரீதியாக அலையடித்த காலத்தில் தனக்கிருந்த ஆளுமையையும், மக்கள் ஆதரவினையையும் வெளிப்படுத்தினார்.

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணியாளின் அருட்கடாட்சம் பெற்றிருந்த அமரர் அவர்கள் அம்மாளின் திருப்பணியில் திழைத்து மகிழ்ந்தார். 1997ம் ஆண்டில் கொழும்பில் தமது இல்வாழ்வின் 50ம் ஆண்டு நிறைவை தமது குடும்பத்தினரும் நலன் விரும்பிகளும் கொண்டாட மகிழ்ந்தனர் இராமநாதன் தம்பதியினர். 2005ம் ஆண்டில் யூன் 25ம் நாள் கொக்குவில், கோண்டாவில் கிராமங்கள் இணைந்து அமரர் அவர்களுக்கு எடுத்த பாராட்டுவிழா அன்னாருக்கு சூட்டிய மணிமகுடமென்றால் மிகையல்ல. பிறநாடொன்றில் மகிழ்ச்சியாக தமது குடும்பத்தின ருடன் வாழக்கிடைத்திருந்தும் தான் பிறந்த நாட்டின் ஊரின், சமூகத்தின் வாழ்வுடன் பிணைந்திருப்பதனை பேறாக கருதி மகிழ்ந்தவர் அமரர் இராமநாதன் அவர்கள். செய்த புண்ணியத்தின் பயனாக தனது இறுதி நாட்கள் வரை தேகாரோக்கியத்துடனும் மகிழ்வுடனும் வாழ்ந்து 85 ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்து சிறந்த இராமநாதன் அவர்கள் 24-05-2006ம் திகதி புதன்கிழமை அதிகாலை 12.20 மணியளவில் டேடன் மருத்துவமனையில் கற்புலத்து மனோன்மணியாள் பதமடைந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Biography in Brief

Mr. Kandiah Ramanathan hailed from a respectable family at Kokkuvil which is one of the popular villages in the Northern Province of Sri Lanka. He was born as the son of late Mr. Vallipuram Kandiah and late Mrs. Vellupillai Muthammah on 29-11-1921. He was the brother of late Coomarasamy (Singapore) Vallipuram (Malaysia) and Mrs. Saraswathy Rasiah.

From his childhool he had taken keen interest in education and had his primary education at Kilner school and his secondary education at Parameswara College, Thirunelvely and at St.Johns College Jaffna. Then he joined the Highways Department as an overseer.

He married Miss Selvaranee, the daughter of Mr. Mylvaganam and Mrs. Sinnamah Mylvaganam, Kondavil East on 20-10-1947 and this was a stepping stone in his life. It turned out to be a prosperous sweet home and they were blessed with six sons namely Sri Ramanathan, Uruthira, Naveenthira, Mahintha, Kugan, Asokan, and three daughters namely Neetra, Ruba and Regina. All of them were brought up well and given good education. Mrs. Selvaranee Ramanathan was a duty conscious partner and nurtured her children well when ever he was away on field work. They settled their children in suitable married life. The family became more prosperous with the arrival of the Sons-in-law and daughters-in-law namely Mrs. Manjula, Mr. Amuthasagaran, Mrs. Nageswary, Mrs. Jeyamalar Dr. Sivanesan, Mr. Buvananayagam, Mrs. Guwandaline, Mrs. Sheela, Mrs. Swarnalatha. More over they have maintained the age old traditions of the family and the family tree began to spread bountifully and blossomed with twenty precious grand children and one great grand child.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

All should derive maximum consolation that their beloved father/ thatha is now enjoying heavenly bliss. In his profession he rose gradually. He worked in Sigiriya, Passara, Colombo, and Moratuwa and retired as a Senior Technical Officer. As a youth he had developed a keen interest in social welfare work. He considered both the villages, Kokkuvil and Kondavil as his eyes and contributed his mite for the development of the village in educational, religious, social and cultural fields.

**It would be appropriate to mention at least a few activities.**

1. He was instrumental in establishing a separate independent Tamil School, in Passara.
2. He had served as Vice President of the Saivaparipalana Sabhai in Badulla.
3. He was one of the pioneer members who established Badulla Hindu college which is now Saraswathy Maha Vidyalayam.
4. He had been the president of the young men Hindu Association of Wattala.
5. From 1971 - 1973 he had been the secretary of the School Development Society of Colombo Hindu College.
6. He had been the founder member and partron of the Manonmany Community Centre, Kokkuvil.
7. He had been the patron of the Valarmathy Niraivalvaham, Champion Lane, Kokkuvil.

He functioned as a member of the Board of Trustee of Nanthavil, Katpulathu Mononmany Ambal temple and he had been the president of the Paripalana Sabha of the same temple since 1993. He steered the committee well and many major works such as the construction of a chariot, Tower, Vasantha Mandapam, etc were done miraculously. His financial contributions deserve special mention.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thus he became popular and in the parliamentary elections in 1977, he contested as an independent candiate and polled thousands of votes which should be considered as a remarkable achievement at a time when the two major political parties were strong and formidable.

He had a prosperous and peaceful life with the blessings of Goddess Katpulathu Manonmany Ambal.

In 1997, his 50th Wedding Anniversary was organized by his friends, welwishers and relatives and it turned out to be a grand function.

He was felicitated at a function orgaized by the two villages of Kokkuvil . and Kondavil on 25-06-2005. It was a feather in his cap. Though he had the pleasant privilege of living abroad with his children and grand-children, he preferred to stay in his motherland. He was rewarded by the god for the services he had done to humanity and he led a healthy and contented life. He breathed his last on 24-05-2006 at about noon and sought eternal happiness.

Aum Santhi! Santhi ! Santhi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலருடைய நெஞ்சங்களில் பசுமையாக நிழலாடிய அமரர் கந்தையா இராமநாதன்.

பிறப்பு உண்டேல் இறப்பு உண்டு என்பது நம் எல்லோருக்கும் தெரிந்ததே. எப்போது உலகில் உயிரினங்கள் தோன்றினவோ அன்று தொடக்கம் பிறப்பும், இறப்பும் ஆரம்பமாகிவிட்டது. இவ்வுலகம் உள்ளவரை தோற்றமும், மறைவும் நிரந்தரமானவை. இது இறைவனால் வகுக்கப்பட்ட நியதி இதில் இருந்து எவரும் தப்பமுடியாது. இறைவனின் படைப்பில் மனிதப் பிறவி எடுப்பதே பெரும் பாக்கியம் பிறக்கும்போது எல்லோரும் ஒரே மாதிரியாகத் தான் பிறக்கின்றார்கள். பின்னர் அவர் பிறந்த குடும்பச் சூழ்நிலை பெற்றோரின் வழிநடத்தல், குடும்பத்தினரின் ஊக்குவிப்பு என்பன அவரை நல்ல மனிதனாக சமூகத்துக்கு கொடுக்கிறது.

மரணத்தின் பின் சொர்க்கமோ நரகமோ கிடைப்பது அவர்கள் இவ்வுலகில் எப்படி வாழ்ந்தார்கள் என்பதைப் பொறுத்தது. அவர்கள் உத்தமராக நல்ல பண்பாளராக வாழ்ந்தார்கள் என்பதை எண்ணும் போது தாமும் அப்படி வாழவேண்டுமென்று எல்லோரும் நினைக்கிறார்கள்.

தனக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்து எல்லோருக்கும் நன்மைசெய்து நல்ல பண்பாளராக கடவுள் பக்தி உள்ளவராக எல்லோருடனும் நன்றாக பழகி யாருடனும் கோபம் கொள்ளாது வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர். அமரர் கந்தையா இராமநாதன் அவர்கள்.

சாந்தமான தோற்றம், புன்சிரிப்புத் தவழும் முகம், அமைதியான சுபாவம், இனிமையான பேச்சு, இரக்கமான சிந்தனை, யாருக்கும் தீங்கு நினைக்காத உள்ளம், ஆழமான கடவுள் பக்தி, உற்றார் உறவினர்க்கு மட்டுமல்லாமல் அயலவர்களுக்கும் ஏன்? அன்னியர்களுக்கும் கூட உதவி செய்யும் ஆழமான பண்பு கொண்ட ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதமான மனிதர். இவர் ஒரு நிறைவான வாழ்வு பெற்றே இவ்வுலகை விட்டு நீத்தார் என்றால் மிகையாகாது. இவரின் திருமணம் தான் எனது தந்தையார் முத்துக்குமாரசாமிக் குருக்கள் செய்து வைத்த முதல் திருமணம். இவர் எனது தந்தையாருடன் இணைந்து சுமார் 40 வருடங்களுக்கு மேலாக நந்தாவில் அம்மன் கோவில் வளர்ச்சிக்கு செயல்பட்டவர். இவரின் திருப்பணிக்கு நந்தாவில் அம்மன் கோவில் வசந்த மண்டபம் என்றும் அன்னாரை ஞாபகப்படுத்தும். எங்கள் குடும்ப நண்பராக, அம்மன் கோவில் மஹோற்சவ இரண்டாம் நாள் உபயகாரராக, நல்ல குடும்பத் தலைவனாக, வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்த இவரின் திடீர் மறைவு எனது ஆன்மாவை உலுக்கியது. இவரின் மறைவால் துயருறும் 50 வருடங்களுக்கு மேலாக சிறந்த வாழ்க்கைத் துணைவியாக விளங்கிய திருமதி. இராமநாதனுக்கும், மற்றும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர் அனைவருக்கும், எங்கள் குடும்பத்தினர் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரின் ஆத்மா சாந்தியடைய மனோண்மணி அம்பாள் திருப்பாதத்தை அர்ச்சிக்கிறேன்.

ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

பிரதமகுரு
**வேதாகம கிரியா சிரோன்மணி**
**மு. ஜெயந்தி நாதசர்மா J.P**
**(முத்து ஜெயந்திநாத குருக்கள்)**

**தோணிக்கல்**
**வவுனியா**

ஒளிகளில் ஓங்காரமாகி உள்ளவர் பிள்ளையார். வரிவடிவங்களில் பிள்ளையார் சுழியாக உள்ளவர். பிரணவமாயும் பிரணவப் பொருளாகவும் உள்ளவர். வேதங்களின் முதலாக உள்ளவர். வேதங்களாகவும் உள்ளவர் பிள்ளையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தான பலன்

| | |
|---|---|
| அன்னதானம் | - தரித்திரம் நீங்கும். |
| வஸ்திரதானம் | - ஆயுள் விருத்தி |
| பூமி தானம் | - பிரம்மலோகத்தையும் , ஈஸ்வர தரிசனம் கிட்டும் |
| தேன் தானம் | - புத்திர பாக்கியம் உண்டாகும். |
| கோ தானம் | - ரிஷிக்கடன், தேவகடன் பிதிர்க்கடன் ஆகியவற்றை நீக்கும். |
| நெல்லிக்கனி தானம் | - ஞானம் உண்டாகும். |
| தீபதானம் | - பாவங்களைப் போக்கும். |
| நெய் தானம் | - நோய் தீர்க்கும். |
| பால் தானம் | - துக்கம் தீர்க்கும். |
| தயிர் தானம் | - இந்திரிய விருத்தி |
| தேங்காய் தானம் | - நினைத்த காரியம் முடியும். |
| பழங்கள் தானம் | - புத்தியும், சித்தியும் கிட்டும் |
| தங்க தானம் | - குடும்பதோசம் நீங்கும். |
| வெள்ளி தானம் | - மனக்கவலை நீங்கும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பில் 50வது திருமண நாளைக் கொண்டாடிய பொழுது வளர்மதி முன்னேற்றக்கழகம் உவந்தளித்த வாழ்த்துப்பாவுடன்



அமெரிக்காவில் 50வது திருமணநாளை கொண்டாடிய பொழுது பிள்ளைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்காவில் 50வது திருமணநாளை கொண்டாடிய பொழுது மகள்மார், மருமகன்கள் உடன்



அமெரிக்காவில் 50வது திருமண நாளை கொண்டாடிய பொழுது மருமகள்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மாசாந்திப் பிரார்த்தனையுரை

**(வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்.)**

அமரர் திருவாளர்.

**கந்தையா இராமநாதன் (JP)**

**(தலைவர் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை)**

அமரர் அவர்கள் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை புகுந்த இடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்து வந்தார். அவர்கள் தனது குலதெய்வமும் இஷ்ட தெய்வமும் ஆகிய நந்தாவில் மனோன்மணி அம்பிகை மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் உடையவர். மேலும் ஆலய வளர்ச்சி முன்னேற்றத்திற்கும் அயராது ஒத்துழைப்பு வழங்கி திருப்பணி வேலைகளிற்கும் தன்னுடைய பங்களிப்பை வழங்கி வந்த ஒரு பெரியார். அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அவர்களின் ஆன்மா சர்வலோக நாயகியாகிய கற்புலத்து மனோன்மணி அம்பிகையின் பாதார விந்தங்களில் சென்றடைந்து (சாரூப சாமீப சாஹித்திய முத்தியடைய அம்பிகையை பிரார்த்தித்து ஆருளாசி கூறி அமைகின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**இங்ஙனம்**
**"சிவாச்சார்ய சாது"**
**ஸ்ரீலஸ்ரீ ச. ஸ்ரீசந்தனக் குருக்கள்**
**பிரதமகுரு**
**நந்தாவில் அம்பாள் தேவஸ்தானம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மண்புகழ் உயர்த்திய மாண்புறு பெரியார்"

- கம்பவாரிதி இ. ஜெயராஜ் -

உத்தமப் பெரியோர் ஓங்குயர் புகழோர்
சத்தியம், தர்மம், சாந்தியை வேண்டி,
நித்தியம் அறங்கள் நேர்படச் செய்தவர்.
நெடியதன் உருப்போல் நிமிர்புகழ் கொண்டவர்
கடிதென உழைத்து களம் பல வென்றவர்
கொக்குவில் பதியும் குலமதும் புகழ்கொள,
தக்க மனிதராய் தரணியில் வாழ்ந்தவர்,
இராமநாதப் பெயருடை வள்ளல்.
எம்மினம் உயர்வுற ஏற்றமே செய்தவர்.
வென்ற தன்செல்வம் வீறடைந்திடவே,
போகமாய், நல்அறப் புகழதாய் ஆக,
தானமும் தர்மமும் தான் பல இயற்றி,
மானமும் பெருமையும் மலையெனச் சேர்த்தவர்.
ஆலயத் திருப்பணி, அறப்பணி, தமிழ்ப்பணி,
அத்தனை பணிகளும் ஆற்றியே மண்ணில்,
நித்தியப் புகழினை நிமிர்வொடு பெற்றவர்.
தக்கவர் தாம்என தரணிக்கு உரைத்துமே,
மிக்க நற்புதல்வரை மேன்மையாய்ப் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணெனப் புதல்வரைக் கருத்தினுள் புதைத்து,
பொன்னெனப் உலகெலாம் புகழ்பெறச் செய்தவர்.
மூப்பினை வென்று முதுமையைப் புறம்செய்து,
தளரா நிமிர்வொடு தங்கமாய் வாழ்ந்த,
வீரிய சிங்கம் வீழ்ந்ததாம் அதிர்ந்தோம்!
கம்பனுக்கென்று நாம் கைதனை நீட்டுமுன்,
தன்பங்கதனை தந்தே மகிழ்ந்தவர்.
எங்களின் கழகம் ஏற்றமே கொள்ள,
என்றுமே விரும்பிய இனிய நற்பெருமகன்.
ஒவ்வொரு கம்பனின் உயர்ந்த நல்விழவிலும்,
மங்கள மனைவியார் மகிழ்ந்துடன் வரவே,
அன்பொடு கலந்து ஆசிகள் செய்வோர்.
உறவாய் எம்மை உளத்தினுள் இருத்திய,
நிறைந்த பெருமகன் நிலம் கடந்தனராம்.
கண்ணீரோடு கலங்கினோம் நாமெலாம்.
புண்ணியப் புகழோர் புவிதனை விடுத்து,
மண்ணில் சாய்ந்தனர். மருண்டது உள்ளம்.
பொன்னாய்ப் போற்றிஅப் புண்ணியர் தனையே,
எண்ணியே உள்ளத்(து) இருத்தி நாம் வாழ்வோம்.
நல்லார் இராம நாதப் பெரியவர்,
எல்லோர் உளத்திலும் என்றுமே வாழ்வார்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் உறைவிடமே.......

ஐம்பத்தொன்பது ஆண்டுகள் எல்லோருக்கும் உதாரண புருஷனாக விளங்கி என்வாழ்வின் ஆதாரமாய், அச்சாணியாய் விளங்கி பரிணமித்த அன்புத்தெய்வம் எமை விட்டு அகன்ற துயரில் தவிக்கின்றேன்.

**"தன்னைப்பற்றி நன்கு அறிந்த ஒருவரால் தான் சிறப்பான வாழ்க்கை வாழ இயலும் அவ்வுண்மைக்கு ஏற்ப வாழ்ந்து காட்டியவர் நீங்கள்!"**

இல்லறம் பேணும் பக்குவத்தை எடுத்துணர்த்தி எங்களுடன் நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை., நடந்து வந்த, கடந்த பாதைகள் பலமானவை! ரம்மியமானவை நல்ல கணவன் என்பதற்கு மட்டும் அல்ல! நல்ல தந்தைக்கும் இலக்கணமானீர்கள். நீங்கள் செல்வம் என அழைக்கும் வார்த்தைக்கு நிகர் எதுவுமில்லை! அவ்வார்த்தைகள் ஏன் காற்றினில் மறைந்தன! பிள்ளைகளுக்கும் எனக்கும் நல்ல ஆசான் நீங்கள்! பண்புகள், பழக்கங்கள் பல கற்றுத் தந்தீர்! அவர் தம் கல்வியில் சீர் கண்டீர்! பிள்ளைகள் அவையத்துள் முந்தியிருக்கச் செய்தீர்! இறுதிவரை அவர் தம் நலனில் அக்கறை கொண்டீர்! என்னை பிரிகையில் எத்தனை பக்குவம் கூறுவீர்கள் அன்று மட்டும் மௌனமாய் வண்டி ஏறியது இதற்காகவா? என்றும் போல் மீண்டும் சுகமாய் வருவீர்கள் எனக்காத்திருந்த எனக்கு பேரிடர் நேர்ந்தது.

தாங்கமுடியவில்லை உங்களின் பிரிவை! ஒவ்வொரு கணமும் உங்கள் நினைப்பு என்னை வாட்டுகிறது. பிள்ளைகள் தவிக்கின்றனர் வானுலகில் இருந்து எமக்கு வழிகாட்டிடுங்கள்.

**45/23A பிறரிக்கா றோட்**
**வெள்ளவத்தை**

**அன்பு மனைவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Tribute to our beloved father, Late Kandiah Ramanathan J.P.

We are indeed very grateful to those members in the community who have recognised and appreciated the help and support our Dad had rendered to them in their times of need.

**We now make our own comments:**

Our Dad lost his father when he was only 11 years old. Not long after the death of his father Dad's two older brothers migrated to Singapore and Malaysia for work. Having been left behind with his mother and younger sister, life at that time must have been a struggle for everyone in the family. During the second World war, soon after finishing school instead of higher education, our Dad found his first job working for the British Royal Airforce buildings runways. At the same time he was employed as a forward sentry looking for any signs of Japanese incursions into Srilanka.

At the end of the second war, our Dad was appointed as an overseer in the Public Works Department. He was first stationed in Chettykulam which was densely forested at the time and needed the infrastructure. Our Dad took up the challenge in building road works, a career in which he became enormously successful. Indeed Dad was extremely proud that three of his sons and a grandson followed in his footsteps, taking up careers in building high ways.

In 1946 Dad married our mum Selvarnee. A few months earlier Dad's best friend, neighbour and blood relative, Mr. Muthuvel Shanmugaratnam married mum's older sister, Pushparanee. This led Dad to move back to kondavil where he had lived as a child before his father's death.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Between 1948 and 1961 mum gave birth to nine children, six boys and three girls. Around 1962, Dad in recognition of his services to the community, was made Justice of the Peace in the UVA province, a position then held for the first time by a Tamil man hailing from the north of the country. Subsequently Dad was made Justice of The Peace for the whole island.

Rearing nine children is no doubt an onerous task for any parent. When it came to spending money Dad made sure we lived comfortably within our means. The intial challenge to this must have come when the two oldest boys were sent for studies in the UK between 1968 and 1969. Similarly, when the need to fund the third oldest son arose some years later, Dad was still undaunted by the prospect of further financial responsibility.

Although funding the education of his three children abroad must have caused an appreciable strain on Dad's finances he was too proud to tell his sons of any struggle, he might have experienced What was important to Dad was that his children felt continued comfort and security he had given to them.

The next challenge to Dad was when the opportunity to marry off his three daughters arose. Dad happily provided for the marriage of all his three daughters who were blessed with kind and understanding husbands.

The third challenge came when Dad's younger children, the three boys, went to the US for higher education. By this time Dad had reached pensionable age of 55 although well before this time Dad had been promoted to the rank of 'Senior Technical Officer' in the Ministry of Highways, an award only given to two men amongst his peers at the time. Thankfully this financial burden on Dad was eased with the hard work and sacrifice of the last three sons who supplemented their own needs whilst studying in the US.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Now that all of Dad's children were established with homes in the affluent west, anyone would have expected Dad to follow them. This was not to be, as Dad was too proud a man to leave his native Sri Lanka or compromise his independence in anyway by moving to live with his children abroad. Except for the occasional need to receive specialist medical treatment abroad, Dad continued to reside in Colombo. During this time Dad had always been in close touch with his community mainly in Kokuvil and Kondavil; in particular Dad made sure that he kept up his responsibilities towards the Nanthavil Amman temple in Kokuvil. Dad, at the same time, helped many charities. Amongst the many projects Dad was involved with, he was instrumental in raising funds and expanding Colombo Hindu College to provide education upto Grade 12. Previously the limit was grade 5.

Sadly, it was soon after attending the Amman Kovil festival in June 2004 that Dad's health deteriorated. Disappointingly Dad discovered that both his kidneys had been irreversibly damaged. This left Dad to live on medication that helped him keep going us far as he could stretch.

Unfortunately during midnight on the 23rd May 2006, fate finally caught up with Dad as on his way to hospital Dad left us all. 'What a peaceful way to die for someone who always loved cars', one of his sons commented. Although Dad is physically no more there is no doubt that his spirit will continue to guide his children, grand children and in deed future generations of our family.

**From Loving Children**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Tribute to My Father In Law
# By Muthu Puvananayagam

The late Kandiah Ramanathan was my father in law by title, but for him there were no son in laws and daughter in laws. All are his children and everbody fondly called him Daddy. His devotion to the welfare of his children is beyond question. He was actively involved in his children's life throughout his lifetime. Many incidents reflect his devotion to family and hospitality.

July 1983, the morning situation in Colombo looked very grim and signs of communal riots had not to go to work. Daddy proceeded onto work with the confidence that nothing would happen to him. By 9:15 am, our houses were set on fire by rioters. My family and I escaped to our neighbor's home through the upstairs' window. At 5 pm, here comes daddy in a jeep with police escorts to take us to safety.

Three months later, while I was working as chief Engineer in Kalutara, Daddy called warning me of a dangerous incident in Anurathapura. He advised me to leave immediately and because of his early warning I was able to safely proceed home. These are just a few examples of how Daddy helped lead my family and me to safety. His kindness was not only limited to family.

People from regions around Sri Lanka would come to Colombo to get a passport, pension, etc. Finding an affordable accommodation is difficult in Colombo, without any social ties. One house on Fedrica Road was open to everyone. Daddy received people with a smile and showed them that one man can make a difference.

It is the Hindu belief that the soul never dies but it separates from present body and enters new body at rebirth. Let us hope his service to humanity continues in rebirth.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A TRIBUTE TO OUR GRANDFATHER

"Do not take thought for your persons or your properties, but first and chiefly to care about the greatest improvement of the soul. I tell you that the virtue is not given by money, but that from virtue come money and every other good of man, public as well as private... The difficulty, my friends, is not in avoiding death, but in avoiding unrighteousness; for that runs faster than death." - Socrates.

Our Grandfather, who we know and always remember and cherish as an equivalent to god, was named Ramanathan Kandiah. To us grand-children though, he is only known as Umma. Where to begin; to be placed in a position to remember a great soul, I am lost for words. To describe your acts, what better way than quote God himself "All that we are is the result of what we have thought. If a man speaks or acts with a pure thought, happiness follows him, like a shadow that never leaves him." - Buddha. It's quite evident that from the love and affection showered by all, happiness will follow you always Umma.

We as grandchildren can attest to our grandfather's placement of unconditional love, kindness, guidance, patience, in addition to the infinite other qualities that we witnessed on a daily basis. The ability to treat each and every one of us as singular and unique individuals irrelevant of family ties, only we can truly appreciate this quality. The countless personal events and moments that we cherish will be evoked any time your name comes up.

Every step we take, every move we make, every single day, every time we pray, we'll be missing you. Wish that God can give our Umma back to us. Can not be selfish though, I suppose. We know that there will be other kids who will cherish our Umma upon his rebirth. Wow, how lucky is their family.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is time that we as grandchildren apply the principles and values and lead our families to the levels which our grandfather expects. Always yield to remember to act without malice, bias.... To give, be unselfish.

"He who experiences the unity of life sees his own Self in all beings, and all beings in his own Self, and looks on everything with an impartial eye." - Buddha. In respecting all beings, I can not see a greater way Umma's memories will be continued forever, from generation to generation.

Cannot wait to see the eyes of my grandchildren light up with my mere appearance. The values, virtues, decency, kindness my grandfather taught me, if I am able to convey just a meager fraction of this, my grandchildren will look at me with the same reverence as I did mine.

Umma, this is not a farewell, you will always be in our hearts and mind. Love you forever and ever. Till the day we meet again.

**Grand Son, Kausigan Amuthasakaran**
**12144 187th St Artesia, CA 90701**
**UAS**

| எண் | எண்சோதிட இரத்தினம் | **Gems for Numerology** | |
|---|---|---|---|
| 1 | மாணிக்கம் | Ruby | 1 - A I J Q Y |
| 2 | முத்து | Pearl | 2 - B K R |
| 3 | புஸ்பராகம் | Golden Sapphire | 3 - C G L S |
| 4 | கோமேதகம் | Cinnamim | 4 - D M T |
| 5 | வைரம் | Diamond | 5 - E H N X |
| 6 | மரகதம் | Emarald | 6 - U V W |
| 7 | வைடூரியம் | Cats Eye | 7 - O Z |
| 8 | நீலம் | Blue Sapphire | 8 - F P |
| 9 | பவளம் | Coral | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்காவில் 50வது திருமணநாளை கொண்டாடிய பொழுது பேரப்பிள்ளைகளுடன்



25-06-2005 கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்ற பாராட்டுவிழாவில் மனைவியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசறையில் உத்தியோகம் பார்க்கும் பொழுது சமாதான நீதவானாக பதவியேற்ற பின் பாராட்டுப் பெற்றபொழுது





மனைவியுடன் தனது 84வது பிறந்தநாள் நிகழ்வின் பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LOVING GRAND PA

My Grandfather, Uma or Uppapa, to my cousins and I, was a remarkable man who lived more than a remarkable life. He was an inspiration to us all, one who in my eyes and all his grandchildren's was a man of unlimited wisdom, stamina and kindness. He was a man who seemed like he would live forever, always there to give his blessings for a special moment in all our lives, whether it be a birthday, a wedding or the birth of a grandchild,never tiring and always there. It is hard for me to believe that he is gone, I am still hoping to pick up the phone and hear his voice telling me he is doing and how I should continue to work hard to make him proud. Sadly he is gone to us now, however if he were here he would tell us not to mourn his passing but rather celebrate his life and the legacy he left behind.

What a legacy it was, leaving behind a loving wife, 9 Children, 20 Grandchildren, and one Great Grandchild. We are all a part of his legacy, a part of him is in all of us and in order to ensure that his legacy continues we must all act in the way that he taught us to act. Those teachings themselves show what kind of a man UMA was. He was a kind hearted soul; patient and generous with his time and affectionate towards all of his family as well complete strangers that were in need. He always took interest in the people he met, and always left an impression upon departing, as he was well known all over Sri Lanka. He worked hard throughout his life always rising to meet a challenge, and making sure those he cared about were always well provided, educated and cared for. His efforts were successful because his children and grandchildren have grown to become doctors, engineers, and bankers. We can all thank Uma for providing us with the opportunity to live good lives and thank him for instilling his hard work ethic in us. I know we all thank him for this, and will aways be grateful to him.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

One story that stands out in my mind about Umma, which shows how well he got along with people and how much people respected him, was an wxperience in NJ. It was at Regina auntie's old house, in Dayton NJ; we were all watching TV, when we saw a police car pull up to the driveway and Uma got out of the vehicle. Umma thanked the officer and the officer smiling pulled away. We all asked Uma what happened and he replied in a non-chalant sort of away; "Oh, he just gave me a ride home because it was going to rain."It turned out the officer saw Uma walking, ended up talking to him and ended up giving him a ride. This shows the remarkble person Uma was, that he could spend a few minutes talking to someone and they came to respect him so much in that time that they went out of their way to ensure such a little thing like him not getting wet in the rain. Umma had a kindness around him that was contagious to all that were around him. We can only hope that in our lives we get that kind of respect from others, as well as be that knid and receive that kindness from others.

I will miss all of his stories. I will miss all of his advice and words of encouragement. I will miss him at my wedding day, wishing he was there blessing the event. I will miss his strong had that guided us all and helped us be strong in moment of sadness. I will miss his perspective and his gentle humor. I will miss his wisdom and intelligence. I will miss the warmth he extended to everyone he met. I know he will be watching us all, checking in from time to time, to ensure we are doing well and are happy. Over all, I will miss my grandfather dearly and will treasure his memory forever.

**From Loving Grandson**
**Mugunthan Naveendra.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UMMA Remembered

Our Umma, Kandiah Ramanathan is our hero. Every time the song, THE WIND BENEATH MY WINGS by Bette Midler came on, Umma was the man we pictured. The song describes a selfless human, who stood in other's shadows while giving them glory. He truly was everything we'd like to be.

Our memories of Umma travel back to our childhood....

Thanusha: I remember Umma taking me to nursery on his scooter. I loved traveling on his scooter. I also loved chocolate. Every time I got home, he would have chocolate waiting for me. He did anything and everything to make me happy.

At times of trouble in Sri Lanka, Umma made sure we were out of harms way. He built us a bunker and made sure it was safe to enter when needed. Despite the ongoing civil war in Sri Lanka, Umma always gave me a reason to smile and not to worry.

Before coming to the US in 1990, Umma was the one who got us safely on the bus and sent us on our journey from Jaffna to Colombo.

You did everything in your power to keep in touch with us, from the telephone calls, to birthday cards, to your visits to the states. You always told me I was a good girl and that you loved me very much. Your words gave me so much hope and made me believe in myself. My memories of Umma will last me a lifetime and I can't wait to pass the stories of a wonderful man to my kids and grandkids. I am so proud to call you my Umma.

Nirosha : It feels like UMMA is still around. He is in everything that I do. He was the one that taught me that it is better to give than to receive. He made me a better person and for that you will always be in my heart. I remember seeing you in Novermber 2005; I just never thought that would be my last time. Even though you were sick, you



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

came with me to the elephant orphanage because you knew coming would make me happy. You got dressed up handsome as ever with your hat and walking stick. You stood tall on the pathway, taller than anyone around. For your birthday, mom and I tried to buy you a cake, but we always knew that when you were around, none of us could pay. We even tried to distract you but that did not work. When Thanusha and I were little we always waited for you to bring chocolate home and you never disappointed us. You are not just known to us, you are known all over the world for everything that you have done. Mom and I went to the Sri Lankan embassy for her passport. While I was waiting for my mom to come out of the bathroom, this man came out from the office and asked me if Kandiah Ramanathan was by grandfather. He said that when he was a young man Umma took him under his wings and helped him. I remember every time we talked on the phone your last line was "I love you very much". I love you Umma. I hope that I could do half the things that you have done for world. I will still be waiting for my birthday card and the hundred dollar cheque that you send every year. Thank you Umma for making us who we are. You have given us enough love that will last an eternity. We love you with all our hearts. You have touched so many lives and for that you will be remembered forever. We will continue your tradition of charity work.

Every time we heard "The Wind Beneath My Wings", by Bette Midler we thought of you... "Did you ever know that you're my hero, and everything I would like to be? I can fly higher than an eagle, 'cause you are the wind beneath my wings.

It might have appeared to go unnoticed, but I've got it all here in my heart.

I want you to know I know the truth, of course I know it, I would be nothing with out you"

**By Nirosha and Thanusha**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்புலத்து மனோன்மணி திருப்பணியில் திளைத்த சீராளன் அமரர் இராமநாதன் அவர்கள்.

கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம் அழகு மிளிரும் வண்ணக் கலையழகுடன் பொலிந்து விளங்குகிறது. அம்பாளின் அருட்கடாட்சத்தால் ஆட்கொள்ளப்பட்ட மெய்யடியார்களின் மனம் நெகிழ்ந்த நன்கொடையால் இத்திருப்பணி மேன்மேலும் வளர்கிறது. இத்தகைய திருப்பணிக்கு கை கொடுத்த மெய்யன்பர்களின் வரிசையில் முதன்மையாக வைத்து எண்ணப்பட வேண்டிய ஒரு பெரியாரே அமரர் இராமநாதன் ஆவார். அவர் அமரராகி விட்டாலும், அவரதுபணி அவரது பிள்ளைகளாலும் குடும்பத்தாலும் தொடரத்தக்க தளம் ஒன்றை அவர் அமைத்துச் சென்றுள்ளார். இதுவும் அம்பாளின் திருக்கடாட்சமேயெனலாம்.

அமரர் இராமநாதன் அவர்கள் வாலிப வயதிலேயே அம்பாளின் திருத்தொண்டில் தன்னை இணைத்துக் கொண்டவர். அந்தக் காலத்தில் பொடியள் திருவிழா எனப்படும் பூங்காவன உற்சவத்தை தான் எவ்வாறு ஊர்மெச்ச செய்தேன் என்று அவர் அடிக்கடி வாயால் உதிர்க்கும் பரவசபக்தி வெளிப்பாட்டை அவருடன் பழகியவர்கள் கேட்க மறந்ததில்லை.

பின்னர் அவர் ஓவசியராக வெளிமாவட்டங்களில் பணிபுரிந்த காலத்திலும், ஓய்வு பெற்றதன் பின்னரும் ஏறக்குறைய 50 ஆண்டுகளிற்கு மேலாக கற்புலத்தி மனோன்மணி அம்பாளின் திருத்தொண்டில் தன்னை ஆழ ஈடுபடுத்தியவர் இச்சேவைப் பணியை நயந்து ஊர் மக்கள் அவரை நீண்டகாலம் பரிபாலன சபையின் தலைவர் என்ற ஸ்தானத்தில் அமர்த்தியிருந்தனர். இக்காலத்தில் இவ்வாலயம் படிப்படியாக திருப்பணி வேலைகளை முழுமைப்படுத்திக் கொண்டிருந்தது.

அம்பாளின் வசந்த மண்டபத்தை தனது உபயமாக நிறைவேற்ற வேண்டும் என்ற அவரது அளவு கடந்த பக்தியுணர்வை மெச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரார் அப்பணியை அவரே நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்கினர். அழகு நயத்துடன் தெய்வீகக் கலை மலிந்த இடமாக உற்சவ காலத்தில் பக்தர்களின் பக்தியுணர்வை வெளிப்படுத்தும் களமாக அவரது உள்ளம் நிறைவேற்றித் தந்தது. நீண்டகாலமாகக் கட்டி முடிக்கப்பட்ட இராஜகோபுரம் உட்பிரகார மண்டபம் இவைகளை வர்ணம் பூசி கலையழகு பெறவைப்பதில் அமரர் இராமநாதன் அவர்கள் தாராளமாக உதவினார். அவரது பொருட் செலவே இன்றைய வர்ணக் கலையம்சங்கள் எனலாம். கேட்டபோதெல்லாம் எதுவித மறுப்புமின்றி சிரித்த முகத்துடன் இப்பணிகளுக்கு வாரிவழங்குவதில் அவர் சிறிதும் சளைத்ததில்லை. அத்துடன் தனது பிள்ளைகளையும் அழைத்து வந்து இத்திருப்பணியில் ஈடுபட வைத்தார். தந்தையாரைப் போலவே பிள்ளைகளும் திருப்பணியில் தம்மை முழுமையாகப் பங்களிப்புச் செய்வதில் முன்னின்றார்கள்.

தந்தையாரது உளம் கோணாது நடக்கும் அவரது வழித் தோன்றல்கள், அவரது மனவிருப்பை நன்கறிந்தவர்கள் ஆகவே தொடர்ந்து வரும் காலங்களில் எத்தகைய திருப்பணிகள் செய்யப்படவேண்டுமோ அவற்றிலெல்லாம் தமது பங்களிப்பை தாராளமாக செய்யத்தக்க ஒரு விருப்பு நிலையை அமரர் இராமநாதன் அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்.

"நல்லார் கண்பட்ட வறுமையின் இன்னாதே
அல்லார் கண்பட்ட திரு"

என்பது வள்ளுவர் வாய்மொழி அமரர் இராமநாதனது வாழ்வில் செல்வம் நீடித்து செழித்து வளர்ந்தது. ஆனால் அச்செல்வம் நல்லார் கண்பட்ட திரு என்று மெச்சத்தக்க வகையில் தான் சிறுவயதில் நேசித்து வணங்கிய குல தெய்வமான மனோன்மணித்தாயின் வளமிகு ஆலயத்திற்கு வனப்பு அளிக்க வழங்கித் திருப்தி கொள்ளும் மனநிலையை அம்பாள் அமரருக்கு அளித்திருக்கிறார். தளர்வுற்ற காலத்தும் அம்பாள் திருப்பணி பற்றித் தளர்வுறா மனம் அவருக்கு அம்பாள் வழங்கிய திருவருள் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்கு மட்டுமல்ல, கொழும்பில் பல்வேறு பொதுப்பணி கட்கும், நலிவுற்றோருக்கும் அவர் நேரிடையாக பல்வேறு வகையான பொருள் உதவிகளை வழங்கி ஆறுதலளித்துள்ளார். தலைநகரில் கம்பன் கழகம் நடாத்திய இலக்கியப் பெருவிழாவிற் கெல்லாம் அமரரின் உதவியைப் பெற்றுள்ளனர். என்று பலரும் பேசக் கேட்டிருக்கின்றோம்.

சிவத்தொண்டு திருஆலயத்தொண்டு கோவில், குளம் கட்டுதல் இவையெல்லாம் யார்க்கும் வாய்க்கப் பெறாத புண்ணிய கருமங்களாகும். ஒருவர் இப்புண்ணிய கருமங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள அவர் பாக்கியம் செய்திருக்க வேண்டும். கொடை என்பது பூர்வயென்ம வாசனையினால் நிகழ்வது. அமரர் இராமநாதன் இத்தகைய நற்பணிகளில் வாழ்ந்து வளம் சிறந்து வள்ளலாகி, அம்பாள் இதயத்துள்ளராகி மறைந்துள்ளார். மனோன்மணி அவருக்கு செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக் கீழ் என்ற பதமளிப்பாள் என்பது திண்ணம்.

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள்
ஆலய பரிபாலனசபை

**பால கணபதி**

நான்கு திருக்கரங்களும், யானைமுகமும் உடையவர். உதிக்கின்ற செங்கதிர்போன்ற நிறம் உடையவர். குழந்தைத் திருமேனியுடையவர். வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு இவற்றை நான்கு திருக்கரங்களிலும் தாங்கியவர். இவரது துதிக்கையில் மோதகம் விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானமும் தர்மமும் தவமென......

வளர்மதி நிறைவாழ்வகம் தேடிக்கொண்ட தகுதியான துணை அமரர் கந்தையா இராமநாதன். தானமும் தர்மமும் தனது கைகளுக்கே என்ற தவத்துடன் வாழ்ந்தவர் வளர்மதி நிறைவாழ்வகம் கண்ட வள்ளல்கள் பலர் வாழ்வகத்தின் நாடி, நரம்புகள் வரை அதன் உயிர் துடிப்பைத் தேடியவர்கள் சிலர் வாழ்வகத்தின் சுமையை சுகமென சுமந்திட்ட வள்ளல் இவர். தனது உள்ளத்தையும் உணர்வையும் வாழ்வகம் மீது அடைமானம் வைத்த பெருந்தகை. அஞ்சாமை, வீரம் தைரியம் என்பன எமக்கு தந்து வாழ்வகத்திற்கு உரமூட்டியவர். மலை குலைந்தாலும் மனங்குலையாத; உடல் உறுதியே தவமெனக் கொண்ட அப்பழுக்கற்ற ஒழுக்க சீலர் பிறர் துன்பம் கண்டு சகிக்க முடியாத நற்பண்பு கொண்டவர். அருகில் இருப்போர் கண்களில் புன்னகை தேடியவர். அன்னாரின் நிறைவாழ்வகம் மீதான ஈடுபாடு அவரின் சமூகப் பார்வைக்கும்; சமூகத்தின் மீதான அக்கறைக்கும்! சிறந்த எடுத்துக்காட்டு! நடுவுநிலைமை தவறாமை; பாராபட்சமின்றிய உணர்வு; சுக துக்கங்களை சமன் செய்தல் என்பன அவரின் தனித்துவ ஆற்றல்கள்! இன்று நிறைவாழ்வகம் அன்னாரின் இழப்பினால் குறைகண்டது. பிறர் நலனில் ஆர்வம் கொண்ட அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்தி யடையப் பிரார்த்திக்கும்.

**கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகமும்**
**வளர்மதி நிறைவாழ்வகமும்.**

**சம்பியன் லேன்**
**கொக்குவில்**

## விஜய கணபதி

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சமூகத் தொண்டர்

அமரர் இராமநாதனின் மறைவினால் நாம் நல்ல ஒரு சமூக, சமயத் தொண்டனை இழந்து விட்டோம். பிறருக்கு உதவவேண்டு மென்ற மனப் பாங்கு அமரருக்கு இயற்கையாகவே அமைந்த ஒன்றாகும்.

அமரர் அவர்கள் சமூகப் பற்றுடன் ஊர்ப்பற்றும் கொண்டவர். இதற்குச் சான்றாக நந்தாவில் மனோன்மணி அம்மன் ஆலயமும் அதனைச் சார்ந்த சனசமூக நிலையமும் அமைகின்றன. இவற்றிற்கு அமரரின் பங்களிப்பு அளப்பரியது, ஊர் அறிந்தது, இதனாலன்றோ அண்மையில் ஆலயச் சமூகம் இராமநாதன் தம்பதியினரை அழைத்து ஆலயத்தில் பாராட்டு விழா எடுத்தது.

இங்கு நான் ஒரு நிகழ்வினைக் கூறக்கடமைப்பட்டுள்ளேன். ஸ்ரீமாவோபண்டாரநாயக்கா அம்மையார் ஆட்சியின் காலத்தில் கோண்டாவில் கிழக்குப் பகுதி நல்ல வருவாயைப் பெற்று மிகச் செழிப்பாக இருந்தது. அப்பொழுதுநான் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தேன். கல்லூரியில் ஒரு கட்டடம் அமைக்கத் தொடங்கி அதனைப் பூர்த்தியாக்க முடியாது தவித்தோம். அமரர் அவர்கள் கொக்குவில் இந்துவில் கல்வி கற்காத பொழுதிலும் ஊர்ப்பற்று மிக்கவரென்பதனை அறிந்த நாம் அமரர் அவர்களை நாடினோம். எமது தேவையைக் கூறியபொழுது மிகவும் உற்சாகத்துடன் எம்மை கோண்டாவில் கிழக்கில் அமைந்த பல வீடுகளுக்கும் கூட்டிச் சென்று கணிசமாக நிதியினைச் சேர்த்துத் தந்தமை எமது மனதைவிட்டு என்றுமே அகலாது.

அது மட்டுமல்ல, அமரர் அவர்கள் பிறமாவட்டங்களில் வேலை செய்யும் பொழுது எமது கல்லூரி மாணவர்கள் அங்கே சென்ற வேளைகளில் அவர்களை வரவேற்று உபசரிக்க தவறியதில்லை என எனது மூத்த ஆசிரியர்கள் அடிக்கடி கூறுவார்கள்.

அமரரின் செழிப்பான முகமும் வசீகரமான தோற்றமும் சிம்மக்குரலும் என்றென்றும் எம்மனத்திரையில் நிலைத்து நிற்கும். அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

**உரும்பிராய்** **அ. பஞ்சலிங்கம்**

**முன்னாள் அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப்பணிக்கு முன்னின்றுழைத்தவர்.....

பிறவிகளில் அரிதற்கரிய பிறவி மனிதப் பிறவி. அதிலும் கூன் குருடு நீங்கிப் பிறத்தல் இன்னும் அரிது. அத்துடன் மனிதன் மனிதனாக வழக் கூடியவனாக மற்றோரால் அவனது சேவை மதிக்கப்படுவதாக பிறந்து வாழ்தல் சாலச்சிறந்தது. அந்த நோக்கிலும் ஓர் உயிரானது தான் செய்த பாவபுண்ணியங்களுக்கு ஏற்ப ஓர் கர்ப்பபையை சென்றடைகின்றது. புண்ணியம் செய்த உயிர்கள் நல்லதொரு தாயின் வயிற்றிலிருந்து பிறக்கின்றது. என்ற தத்துவத்தின் அடிப்படையிலும் பார்க்கும் போது இவ்விரண்டிற்கும் பொருத்தமான ஓர் உதாரண புருசராக இராமநாதன் விளங்கினார்.

அன்புக்கும், அரவணைப்பிற்கும், பண்பிற்கும், பாசத்திற்கும், கடமைக்கும், கண்ணியத்திற்கும், கண்டிப்பிற்கும், கட்டுப்பாட்டிற்கும் இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் அமரர் இராமநாதன் அவர்கள்.

எமது கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளராக பணிபுரிந்து அக்கல்லூரியின் வளர்ச்சியில் மிகவும் அக்கறை காட்டியுள்ளார். ஏனைய உறுப்பினர்களையும் அரவணைத்து கல்லூரியின் பௌதீக வள அபிவிருத்தியில் அயராது பாடுபட்ட ஒருசேவையாளர் தான் பிறந்த ஊரில் கூட பல சமூக பணிகளை ஆற்றியமையும் அறியமுடிகின்றது. கல்லூரி நிகழ்வுகட்கு அழைக்கும் போது எமது அழைப்பை ஏற்று மிகவும் சந்தோஷமாக நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் ஒரு பெரியவர். 12-05-2006 நிகழ்வில் கலந்து கொள்ளும்படி கேட்டபோது கட்டாயம் மனைவியுடன் வருவேன் என்று சந்தோஷமாக கூறியவர். அன்று பி.ப 4.00 மணியளவில் தனக்கு சுகவீனமாக இருக்கின்றது வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதுள்ளது மன்னித்து கொள்ளுங்கள் என தொலைபேசி மூலமாக அறிவித்த போது வரமுடியவில்லையே என வருந்தி அதனை தெரிவித்த உயரிய பண்பை எண்ணிப் பார்க்கின்றேன். பகட்டோ, பம்மாத்தோ இல்லாத ஒரு நல்ல மனிதர், கண்டிப்பான ஆனால் கருணை உள்ளம் கொண்ட ஒரு சேவையாளன். மரணம் என்பது நிச்சயிக்கப்பட்டது தான் நாம் வாழும் போது செய்தவை மரணத்தின் பின்பும் வந்து நிற்கும். அந்த வகையில் பேசப்படுவதற்கு காரணமான நல்ல மக்களை பெற்றிருக்கின்றார். நல்ல நண்பர்களை பெற்றிருக்கின்றார். நல்ல சமூக சேவையை செய்திருக்கின்றார். அனைத்துக்கும் மேலாக சிறந்த தெய்வபக்தி உடைய ஒருவராக வாழ்ந்திருக்கின்றார்.

அமரர் இராமநாதனின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர்க்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கின்றேன்.

**தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமி**
**அதிபர்.**
**பம்பலபிட்டி இந்துக்கல்லூரி கொழும்பு**

## தருண கணபதி

எட்டுத் திருக்க்ரங்களையும், யானை முகத்தையும் உடையவர். கைகளில் பாசம், அங்குசம், பணியாரமாகிய மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த தன்கொம்பு, நெற்கதிர், கரும்பின் துண்டு இவற்றையுடையவர். நண்பகல் தோன்றுகின்ற சூரியனைப் போன்ற நல்ல சிவந்த திருமேனி படைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமதிப்பிற்குரிய போஷகர்

எமது நிலையத்தின் போஷகராகவிருந்த எமது அன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய திரு. கந்தையா இராமநாதன் அவர்கள் திடீரென அமரரானார் என்ற துயரச் செய்தி கேட்டு ஆறாத்துயரில் மூழ்கினோம்.

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலின் முன்றலில் கடந்த அறுபது வருடங்களைக் கடந்த மக்களுக்குச் சேவையாற்றிவரும் மனோன்மணி சனசமூக நிலையத்தின் வளர்ச்சியில் ஆரம்பகாலம் தொட்டு முக்கிய பங்காற்றியவர் அமரர் இராமநாதனாவார். இவர் நிலைய வாசகர்களின் நலன்கருதி நீண்டகாலமாக, ஆரம்பகாலத்தில் வீரகேசரி தினசரிப் பத்திரிகையையும், அதனைத் தொடர்ந்து உதயன் தினசரிப் பத்திரிகையையும் அமரராகும்வரை நிலையத்திற்கு நன்கொடையாக வழங்கிவந்தவராவார். இவர் வழங்கிய தினசரிப் பத்திரிகைகளை வாசித்து பயன்பெற்றோர் ஏராளம். மேலும் நிலைய பாலர் பாடசாலையின் வளர்ச்சியிலும் அதீத அக்கறை காட்டிய அமரர். பாலகர்களின் நலன்கருதி அதன் ஆசிரியை ஒருவரின் சம்பளத்தையும் நன்கொடையாக வழங்கிவந்த வள்ளலாவார். கடந்த வருடம் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக தனது பாரியார் சகிதம் கலந்து எம் எல்லோரையும் மகிழ்வித்தார்.

அன்னார் மறைந்தாலும், அவர் நிலைய வளர்ச்சிக்கு ஆற்றிய சேவைகள் நிலைய வாசகர்களின் மனதில் என்றென்றும் நிலைத்திருக்கும். அமரரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**நந்தாவில் அம்மன் கோவிலடி,**
**கொக்குவில்.**

**மனோன்மணி,**
**சனசமூக நிலையத்தினர்,**
**விளையாட்டுக் கழகத்தினர்,**
**பாலர் பாடசாலையினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A TRIBUTE

It is with feelings of profound shock that I heard the sorrowful death of Mr. Kandiah Ramanathan. He hailed from a respectable family.

From age to age, Kokkuvil, a popular village has produced great men carrying on the old traditions and ever adapting then to changing times. Late. Mr. Kandiah Ramanathan is one of the noble sons of Kokkuvil.

He lived his full life of four scores and five. If the good is said to die young, the better are said to die old.

He chose his partner, Mrs. Selvaranee Ramanathan at Kondavil, a neighbouring village and settled at Kondavil.

I had the opportunity to enjoy his friendship for more than thirty five years. He had been the secretary of the Rural Development Society of Kondavil East and I had been the Assistant Secretary. During that period the society endeavoured enthusiastically to expand the hospital at Kondavil. He had also given a helping hand towards the development of Kondavil East Ramakrishna Maha Vidiyalam. Atputha Varthana Vinayagar Community Center and Kumaran Sports club. He had been liberal enough to help the community centres at Kondavil North and won the affection of the people. He had been the Secretary of the School Development Society of Bambalapitiya Hindu college and he was felicitated by the society in 2003. His conviction was that goodwill is a potential energy which should be used or organized on a large scale to build up our villages. His pleasant smile and amicable ways endeared him to his associates.

He believed in spiritual experience. He and his children have amply donated to the temples to maintain and conduct festivals. Nanthavil Manonmany Ambal received his top priority and he had been the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

president of the Trustee for many years. His inspiration had been meaningful and beneficial.

Like an oasis in a desert to a weary traveller, temple festivals strengthen faith, revitalize, resolve and refresh the people for the journey down the life's road.

He had narrated to me his experiences and the steps he had taken to come in life amidst heavy domestic responsibilities. He set himself a goal and directed his energies towards it without paying any heed to unwanted and unworthy criticisms. In his profession too, he was crowned with success rising by dint of hard work to the position of Senior Techical Officer, Ministry of Highways.

It is difficult to write about him without the feeling of intense emotion. He had the capacity to evoke such attachment and it was due to his foresight and loveable ways, his family with many members of various professions is firm, intact and cannot be disintegrated. His grandson Mr.Amuthasegaram Kausigan was overwhelmed with emotions while making his funeral oration. In short, he had left footprints in the hearts of many.

It is not what he had but what he did was his kingdom. He had played his innings with courage, determination and dedication. In recognition of his services, the government of Srilanka had conferred on him the title Justice of the Peace.

Only some events are recorded here to indicate the quality, the sum and substance of the man for want of space. In fact, the appreciation of these qualities had been amply demonstrated at his 50th wedding anniversary. There is a saying, "Behind each successful man there is a woman." Mrs. Selvaranee Ramanathan had fulfilled her task admirably. Many had paid their last respects and many had sent messages of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாசாலையில் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பொழுது



கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியின் அபிவிருத்திச் சங்கத்தின் முன்னைய நாள் செயலாளர்கள் கௌரவிப்பு நிகழ்வின் பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம் நடாத்திய சிறுவர் தினவிழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய பொழுது



கொக்குவில் மனோன்மணி சனசமூகநிலையத்தின் சிறுவர் நிகழ்வின் பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

condolence and floral tributes from here and abroad and all these bear eloquent testimony to the fact that he was loved and held in high esteem.

We all loved him in life and let us not forget him in death.

On behalf of the people of Kondavil, here and abroad, I extend the deepest sympathies to his beloved wife, children and other members of his family.

May his Aathma attain bliss at the holy feet of Lord Shiva and goddess Manonmany Ambal.

Shanthi! Shanthi!! Shanthi!!

**P.K.RAJARATNAM**
**Retd. Principal, Kopay Christan College.**

1. Former president of Kondavil East Atputha Narthana Community Centre.
2. Former Secretary of Sri Nagapoosany Ambal Temple, Kondavil.
3. Former Secretary of the School Development Society of Kondavil East R.K.M. Maha Vidiyalam.

No. 36 A/2, 37th Lane,
Wellawate, Colombo - 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடுசெய்ய முடியாத இழப்பு

அன்புக்குரிய மாமனார் திரு.கந்தையா இராமநாதன் அவர்கள் இவ்வுலகை விட்டு அமரத்துவம் அடைந்தது எமக்கு பெரும் தாக்கத்தையும், துயரத்தையும் தந்துள்ளது. அன்னார் எனது தாய்வழி மாமனார் ஆவார். எனது தாயாரிடம் அன்பும், பாசமும் கொண்டவர். எல்லோரிடமும் பண்பாகப்பழகி அவர்கள் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு அனைவரினதும் நன்மதிப்பைப் பெற்றவர். இளமைப்பருவத்தில் உறவினர்களால் "துரை" என்று செல்லமாக அழைக்கப்பட்டவர் இறுதிவரை "துரை" யாகவே வாழ்ந்தார். என்னைப் பொறுத்தவரை எமக்கு திருமணம் செய்து வைத்து இல்லறத்தை நல்லறமாக நடத்த வழிசமைத்தவர். யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து கொழும்பில் வசிப்பதற்கு வருகைதந்த பொழுது எம்மை அன்புடன் வரவேற்று இருப்பதற்கு இல்லம் தந்து உதவியதோடல்லாமல் நான் சுகயீனமுற்று வைத்தியசாலையில் இருந்த பொழுது தினமும் வருகை தந்து ஆறுதல் கூறி ஆதரித்த நற்பண்பாளன்.

"அன்புக்கும் உண்டா அடைக்கும்தாழ்"

என்பது வள்ளுவன் கூற்று அவர் அன்புக்கு அணிகலனாக நல்வாழ்வு வாழ்ந்து இவ்வுலக வாழ்வை நீத்து விட்டார். அவரின் பிரிவால் துயருறும் அவரது அன்புத்துனைவியாருக்கும், பிள்ளைகளுக்கும், மருமக்களுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும், மற்றும் உறவினர் களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல அம்பாளின் திருப்பாதங்களில் சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

45/23 B, FREDRICA ROAD
WELLAWATTA

மகேஸ்வரிதேவி சந்திரசேகரா
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கந்தையா இராமநாதன் அவர்கள்.

சீர்பெருகும் கோண்டாவில் கிராமத்தின் மத்தியில் புகழ் ஓங்க வாழ்ந்தவர்.

"தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" என்று திருவள்ளுவர் வாக்கு ஒரு மனிதன் தனது வாழ்க்கையில் சேர்த்த செல்வம் என்பது மற்றவர்களுக்குக் கொடுத்து உதவியதால் பெற்ற இன்பம் தான். இந்த வகையில் அன்னாரின் சேவைகளைப் பெற்றுக் கொண்டதால் இக்கிராமம் பல வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. இக்கிராமத்தின் அறிவூட்டும் நிலையமாக விளங்கும் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு அன்று முதல் இன்று வரை பேருதவிகள் புரிந்துள்ளார்.

நவீன தொழில் நுட்பச் சாதனங்கள் கல்வித்துறையில் முக்கியத் துவம் பெற்று வரும் இந்நாளில் எமது பாடசாலைக்குக் கணணிப் பொறிகளை வழங்கிக் கணணிக் கல்வியில் பாடசாலை முன்னணியில் நிற்பதற்கு வழிகோலியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது ஆசியுடனும், உதவியுடனும் ஆரம்பிக்கப்பட்ட கணனித் துறையில் பல மாணவர்கள் ஆர்வத்துடன் கற்று வருகின்றனர். எமது பாடசாலையில் 2004ம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்புரை யாற்றி எல்லோரது மனதிலும் நீங்காத இடம் பிடித்து விட்டார். தமது கிராமத்தில் உதவி கேட்கும் சாதாரண மக்களுக்கும் கோயில்களுக்கும் பணத்தை வாரி வழங்கிய வள்ளலும் இவரே. இன்று நம் மத்தியில் இவர் இல்லையாயினும் அவரது வாழும் காலத்தில் செய்த சேவைகள் காரணமாக அவரது பெயரும், புகழும் என்றும் நிலைத்திருக்கும் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. ச. வாமதேவன்.**
**அதிபர்.**
**யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண**
**மகா வித்தியாலயம் கோண்டாவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பண்பாளன்

அமரத்துவம் அடைந்த அன்பிற்குரிய கந்தையா இராமநாதன் அவர்கள் (அங்கிள்) இன்று எம் மத்தியில் இல்லை என்று என்னும் பொழுது உள்ளம் எல்லாம் வெந்து வெதும்புகின்றது. உறவினர்கள், நண்பர்களை வரவேற்று உபசரிப்பதில் பெரும் விருப்பு கொண்டவர்.

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்பது வள்ளுவர் வாக்கு அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர், அன்புடையவர் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர் என்பது பொருள். வள்ளுவர் வாக்குக் கொப்ப சிறுவர், வயோதிபர் இல்லங்களுக்கும், கல்விக்கூடங்கள், சமய, சமூகநிறுவனங் களுக்கும் வாரி வழங்கிய தோடல்லாமல் அண்மையில் சுனாமி யால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 3லட்சத்திற்கு மேல் பணவுதவியும் செய்த வள்ளலார் என்றால் மிகையாகாது. கொக்குவில், கோண்டாவில் பகுதி மக்களுக்கு தன்னலம் கருதா சேவைகள் ஆற்றி அப்பகுதியின் சிற்றரசன் போல் சிறந்து விளங்கினார். தனது குலதெய்வமாகிய நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாளில் மிகுந்த பற்றுடையவராக வாழ்ந்தவர். வருடாவருடம் அம்பாளிற்கு நடைபெறும் திருவிழாவின் இரண்டாம் நாள் திருவிழாவை பொறுப்பேற்று சிறப்பாக நடாத்திவந்தார். இவரின் போற்றுதற்கரிய குணாதிசயங்கள் என்னை மிகவும் கவர்ந்தனவாகும்.

சிறந்த பெருங்குடும்பத்தின் தலைவர் பிரிவால் துயரக்கடலில் ஆழ்ந்து நிற்கும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து அவர் தம் ஆத்மா எல்லாம்வல்ல அம்பாளின் திருவடிகளை அடைய பிராத்திக்கின்றேன்

கோண்டாவில் கிழக்கு **த. இ. பாலசுந்தரம்**

கோண்டாவில் பாமினி எஞ்ஜினியேஸ் அன் கென்றைக்றர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்ந்த உள்ளம் கொண்ட உத்தமர்.

கொக்குவில் மண்ணில் பிறந்து, கோண்டாவிலில் திருமணங் கொண்டு, நன்மக்களைப் பெற்று நலமுடன் வாழ்ந்த பெரியார் கந்தையா இராமநாதனாவார், யார் மனமும் புண்படாதவாறு நகைச்சுவையுடன் உரையாடி, நன்மதிப்புப் பெற்ற இவர், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாளின் மீது அளவு கடந்த நம்பிக்கை கொண்டவர். அந்த ஆலய அறங்காவலர் சபையின் தலைவராகப் பலகாலமிருந்து பெருந் தொண்டாற்றியு முள்ளார் அவ்வாலய வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டியவர் என்பதும் எல்லோருக்கும் தெரிந்ததே. இரக்க சுபாவமும், மனப்பூர்வமாகவே உதவும் தன்மையும் கொண்ட இவர், ஏழை, எளியவர்களுக்கும், இடர்ப்படுபவர்களுக்கும், ஆலயத் தொண்டுகளுக்கும் அள்ளிக் கொடுத்து உள்ளம் பூரிப்படைந்தார். "அற்கா இயல்பிற்றுச் செல்வமது பெற்றால் அற்குப ஆங்கே செயல்" என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க வாழ்ந்து காட்டியவர். பிற்காலத்தில் தமது பிள்ளைகள் பெருமையுடன் வாழ்வதற்கும் தேட்டம் தேடி வைத்தார். அவர்களை வளமுடன் வாழ வழிவகுத்ததோடு, சமூக சேவைகளுக்கும் சற்றும் தளராது உதவினார். பெயரை விளம்பரப்படுத்துவதற்காகச் சேவை செய்யும் பேதமையில்லாத பெரியார். யாரோடு பழகினாலும் அவர்களால் இலகுவில் கவரப்படக் கூடியவராகவும் விளங்கினார். இன்முகத் தோடு இன்சொல் பேசி எவரையும் எளிதில் கவர்ந்திடும் இவர், 24-05-2006ல் இவ்வுலகை நீத்துவிட்டார் என்ற செய்தி எம்மை யெல்லாம் பெரும் துன்பத்துள் ஆழ்த்தியுள்ளது.

கொக்குவில், கோண்டாவில் மக்களால் மட்டுமல்லாது, இவர் எவ்விடங்களில் வசித்திருந்தாலும், அவ்விடங்களிலும் இவரைப் பாராட்டாதவர்களில்லையெனலாம். பொது வேலைத்திணைக் களத்தில் (P.W.D.) பசறையில் பணியாற்றிய பொழுது, பசறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதன் என்று பலராலும் பேசப்பட்டார். "ஓவசியர் இராமநாதன் ஒரு உத்தம புருஷர்" என்று பொது வேலைத் திணைக்கள உத்தியோகத்தர் கள் பலரும் பாராட்டிப் பேசியதையும் நான் நன்கு அறிந்தவன். பொது வேலைத் திணைக்களத்தில் 1961 ஆம் ஆண்டில் நான் அரசாங்க எழுதுவினைஞராக நியமனம் பெற்றிருக்கிறேன்.

எழுபதாம் ஆண்டில் எனது மனைவிவழி உறவினராக இவர். ஆவதற்கு முன்பிருந்தே, இவரை நான் நன்கு அறிந்து பழகியிருந்தேன். சிரித்தமுகத்தோடு சிலேடையில், நகைச்சுவை ததும்பப் பேசும் இவருடைய நல்ல பண்பினை நான் மெச்சினேன். உற்றவிடத்துதவும் உத்தமராகிய இவர், ஒருவரது துன்பத்தைக் கண்டு சகிக்கமுடியாத இளகிய உள்ளமுடையவராயுமிருந்தார்.

நல்லூர் தேர்தல் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராயும், அரசியல் அதிகாரியாயும் விளங்கிய அருளம்பலம் அவர்களுடன் போட்டியிட்டு, அவரை விடக்கூடுதல் வாக்குகளைப் பெற்று இரண்டாமிடத்தைப் பெற்றிருந்தாரென்பதும் குறிப்பிடத்தக்கது. சிந்தனையும் செயலும் ஒன்றாகவே வாழ்ந்த இச்செம்மல், இன, மத பேதமின்றி எல்லோரையும் நேசித்தார். பெருந் தெருக்கள் திணைக்களத்தில் சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தராக விளங்கிய இவர், செய்த சேவைகளைப் பற்றிச் சிங்களப் பெருமக்கள் கூடச் சிறப்பாகச் சொல்வார்கள். இராமநாதன் அவர்களின் மூத்த மருகராகிய ந. அமுதசாகரன் அவர்கள் அரசாங்க நிர்வாக சேவைத் திணைக்களத் தாபனக் கிளையில் பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில், நானும் அதே அலுவலகத்தில் பணிபுரிந்தேன். அவ்வேளையில் இராமநாதனின் உறவினர் அவர் என அறிந்த, முன்னாள் அமைச்சராகவிளங்கிய மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரம அவர்கள், என்னுடன் கதைத்த பொழுது, "திரு இராமநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இனிய தமிழ் நண்பர்'' என்றும், அவரது பண்புகளையும் நேரடியாகவே என்னிடம் சொன்னார்.

என்னைப் பொறுத்த அளவில், இப்பெரியவர், எனது மகளின் திருமண வைபவத்தில் முன்னின்று உதவியதன்மையையும், நான் நோய் வாய்ப்பட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில், இருதயநோய்ச் சிகிச்சைப் பிரிவில் சத்திர சிகிச்சைக்குட்பட்டிருந்த வேளையில், தள்ளாத வயதிலும், அடிக்கடி படியேறிவந்து ஆறுதல் கூறி உதவிகள் செய்தமையும் என்றும் மறக்கமுடியாதவை. அந்த அன்புள்ளங் கொண்டவர் இன்றில்லையென்பது பெருங் கவலைதரும் ஒன்றாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**செ. மதுசூதனன்**

**கோண்டாவில் கிழக்கு.**

## சக்தி கணபதி

செவ்வந்திவானம் போன்ற நிறமுடையவராக பச்சைநிற மேனியளாகிய தேவியைத் தழுவிக்கொண்டு இருப்பவர். ஒருவர்க்கொருவர் இடுப்பில் கைகொடுத்துத் தழுவிக் கொண்டிருப்பது தனியழகு. பாசம், பூமாலை இவற்றைத் தாங்கிய திருக்கரத்துடன் அஞ்சலென்கிற அபயகரமும் உடையவர்.

## ஏகதந்தர்

பேழை வயிற்றுடன், நீலமேனியர், கோடரி, அட்சமாலை, இலட்டு, தந்தம் இவற்றையுடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயா என் தெய்வம்

எங்கள் ஐயா எங்கள் எல்லோரையும் விட்டு பிரிந்து விட்டார் என்ற செய்தி கேட்டதும் என்னால் நம்பமுடியவில்லை ஐயாவை விட்டு இரண்டு நாட்களுக்கு முன்தான் நான் எனது ஊருக்கு சென்றிருந்தேன். உடல் நலக்குறைவாக இருந்தாலும் உசாராகவும் சந்தோஷமாகவும் இருந்தவர். நான் வீட்டுக்குபோய்வருகிறேன் என்ற பொழுது விடை தந்து அனுப்பிய ஐயா இறந்து விட்டார் என்ற செய்தி என்னை உலுக்கிவிட்டது. என்மேல் இடி விழுந்தது போல் உணர்வேற்பட்டது. ஐயா இந்த உலகத்தில் இல்லை என்று எப்படி நம்புவது சிறுவயதிலேயே ஐயா தன்னுடன் என்னை இணைத்துக் கொண்டவர். உடை, உணவு, தந்து நல்ல புத்திமதிகள் சொல்லி தன் பிள்ளைகளில் ஒருவராக என்னையும் வளர்த்தவரல்லவா எங்கள் ஐயா, அம்மாவும் ஐயாவும் வாழ்ந்த வாழ்கை, அம்மாவிடம் வைத்திருந்த அன்பு அம்மாவால் எப்படி தாங்க முடியும் அவரின் இழப்பை. தம்பி, தங்கச்சிமார்களை (பிள்ளைகளை) அன்பாகவும் செல்லமாகவும் வளர்த்த ஐயா ஒருதருக்கும் ஒரு குறையும் வைத்ததில்லை. ஐயா எங்கள் குடும்பத்திற்கு வீடு கட்டுவதற்கு பணம்தந்தார். என் பிள்ளை வெளிநாடு செல்வதற்கு உதவி செய்தார் நான் கேட்டபொழு தெல்லாம் எனக்கு உதவி செய்த என் ஐயாவை இனி எங்கே நான் காண்பேன். ஐயா என் தெய்வம் ஐயாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

**என்றும் ஐயாவை மறக்காத**

**மாது**

தன்னை நினைப்பவர், தன்னை வழிபடுபவர், தன்னைத் தியானிப்பவர், இவர்களின் உள்ளத்தில் பிள்ளையார் எப்படித் தோன்றுகிறார்? தத்துவார்த்த மூர்த்தியாகத் தோன்றுகிறார். பொருள் பொதிந்த உருவமாகத் தோன்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபவழிபாடு

அதிகாலை நாலரை மணிமுதல் ஆறுமணிக்குள் தீபம் ஏற்றுவதாலும், மாலை ஐந்தரை மணிமுதல் ஆறுமணிக்குள் தீபம் ஏற்றுவதாலும் நிறைவான வளமும், பலன்களும் நிச்சயம் கிடைக்கும்.

விளக்கு ஏற்றிவைக்கும் திசைகளும் அதன் பலன்களும்

| | |
|---|---|
| கிழக்கு - | எல்லாவித கிரக தோஷங்களும், பீடைகளும் விலகும் |
| மேற்கு - | கடன் தொல்லை, சனிபீடை, பங்காளிப்பகை நீங்கும் |
| வடக்கு - | செல்வம் சேரும், திருமணத் தடை தீரும். |
| தெற்கு - | அமங்கலமும், அபசகுணமும் ஆகும். எனவே தெற்கு திசையைப்பார்த்து விளக்கு ஏற்றிவைக்கக் கூடாது. |

## குத்துவிளக்கு

ஒருமுகம் ஏற்றினால் - மத்திம பலன் கிடைக்கும்.
இருமுகம் ஏற்றினால் - குடும்ப ஒற்றுமை பெருகும்.
மூன்றுமுகம் ஏற்றினால் - புத்திர சுகம் தரும்.
நான்குமுகம் ஏற்றினால் - பசு, பூமி பாக்கியம் தரும்
ஐந்துமுகம் ஏற்றினால் - செல்வம் பெருகும்.

குத்துவிளக்கினை திங்கள், வியாழன் மாலை வேளையில் தேய்க்க வேண்டும்.

எவர்சில்வர் விளக்குகளைப் பூஜை அறையில் விளக்கேற்ற பயன்படுத்தக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபத்தில் துர்கா, லட்சுமி, சரஸ்வதி என மூன்று சக்திகள் உள்ளன. தீபஒளி தீய சிந்தனைகள் ஏற்படாவண்ணம் தடுக்கிறது.

வீட்டில் சாமிப்படங்களுக்கு முன்பாக அகல்விளக்கு ஏற்றி போதுமான எண்ணெய்விட்டு விளக்கு ஸ்தோத்திரம் கூறவேண்டும். வீட்டில் உள்ள குழந்தைகளையும் உடன் வைத்துக் கொள்ள வேண்டும். இதனால் வாழ்வில் எல்லாவித துன்பங்களும் நீங்கும்.

தீபம் எரிந்துகொண்டிருக்கும் பொழுது விளக்கை வாயால் ஊதி அணைப்பதோ, திரியைக் கையால் நசுக்கி அணைப்பதோ கூடாது. மெல்ல அத்திரியை பின்னுக்கு இழுத்து அது எண்ணெய்க்குள் அமிழ்ந்து சமனப்படுமாறு செய்யவேண்டும். அப்படி செய்யும்முன் இரண்டு சொட்டுப் பாலை தீபத்தின் இருபுறமும் வைக்கவேண்டும்.

பஞ்சுத்திரி போட்டு விளக்கேற்றினால் வீட்டில் மங்களம் நிலைக்கும்.

தாமரைத் தண்டுத்திரி போட்டு விளக்கேற்றினால் மக்கட்செல்வம் உண்டாகும். தெய்வக் குற்றம் நீங்கி மனசாந்தி ஏற்படும்.

வெள்ளை எருக்கன் பட்டைத்திரி போட்டு விளக்கேற்றினால் பெருத்த செல்வம் சேரும்.

புதுமஞ்சள் துணி திரிபோட்டு விளக்கேற்றினால் பேய்பிடித்தவர்களுக்குத் தொல்லை நீங்கும். காற்று, கருப்பு சேஷ்டைகள் விலகும். அருள்கிட்டும்.

கற்பூரம், விளக்கு, மெழுகுவர்த்தி ஆகியவற்றை வாயால் ஊதி அணைக்ககூடாது.

ஊதுபத்தியைக் கொளுத்தினால் அது எரியும் பொழுது அதை அணைக்க வாயால் ஊதக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோலமிடுதல்

வீட்டுவாசலில் கோலமிடுவதால் கெட்ட ஆவிகள் வீட்டிற்குள் நுழையாது.

கோலமிடுவதை வேலையாட்கள் செய்யக்கூடாது.

அமாவாசை, திவசம் ஆகிய நாட்களில் வாசலில் கோலம் போடக் கூடாது.

கோலமிடும் பொழுது சுபகாரியங்களுக்கு ஒரு கோடு கோலம் போடக் கூடாது. அசுப காரியங்களுக்கு இரட்டைக்கோலம் போடக்கூடாது.

தெற்குப் பார்த்து நின்று கோலம் போடக் கூடாது. போடும் கோடு தெற்கில் முடியக்கூடாது.

## அமோகமான பலன்தரும் அட்சய த்ரிதிகை

அட்சயத்ரிதியை தினத்தன்று செய்யப்படும் எச்செயலும் ஒன்றுக்குப் பலவாகப் பலனளிக்கும் என்கிறது. பவிவ்யோத்ர புராணம்.

ஏழைகளுக்கும் ஆடைதானம் செய்வது உடல் ஆரோக்கியம் காத்திடும்

பசியுடன் இருப்போருக்கு பழங்களைத் தருவது உயர்பதவி கிட்டச் செய்யும்.

அன்னதானம் செய்வது அகால மரணத்தைத் தடுக்கும்.

நீர்மோர், பானகம் இவற்றைக் கொடுப்பது, கல்வியில் வளர்ச்சி கிட்டச் செய்யும்.

தயிரன்னம் தானமளிப்பது, தடைகளைப் போக்கி முன்னேற்றம் பெறச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஓம்"

## ஓம் என்பது பிரணவசொரூபம்.

எந்த நேரத்திலும் "ஓம்" என்று உச்சரித்துக் கொண்டிருந்தால் மிகச்சிறப்பு. இதனால் எல்லாவித துன்பங்களும் விலகும். வரவிருக்கிற துன்பங்களும் நெருங்காது. மூலாதாரத்திலிருந்து மூளை வரை உள்ள எல்லா நரம்புகளையும் தொட்டு இயங்கச் செய்கிறது. இதை உச்சரிப்பதால் வினைகள், விதிகள் வராது. பத்மாசனத்தில் அமர்ந்து கூறினால் விதியும், வினைப்பயனும் பாதிக்காது.

# நவக்கிரகங்களை வழிபட

### சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

### சந்திரன்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சற்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சந்திரா போற்றி

### அங்காரகன்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கராஹனே அவதிகள் நீக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபகவானே பொன்னடி போற்றி
பதந் தந்து ஆள்வாய் பண்ணொலியானே
உதவியே அருளும் உத்தமா போற்றி

### பிரகஸ்பதி

குணமிகு வியாழக் குருபகவானே
மணமுள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப் பாகுருநேசா
க்ரகதோஷ மன்றிக் கடாட்சித் தருள்வாய்.

### சுக்கிரன்

சுக்கிர மூர்த்தி சுபமிக ஈவாய்
வக்கிர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே.

### சனி பகவான்

சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்கமனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா.

### ராகு

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
இராகுக் கனியே ரம்மியா போற்றி

### கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்சத்திரங்களின் படி பெயர்வைத்தல்.

குழந்தைகளுக்கு நட்சத்திர ரீதியாகப் பெயர் வைத்தல் நல்லது. ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் சில எழுத்துக்கள் சார்ந்துள்ளன. அந்த எழுத்துக்களில் ஏதாயினும் ஒன்றில் துவங்கும் பெயரை வைக்கலாம். இது நட்சத்திர நாமம் எனப்படும்.

| நட்சத்திரம் | பெயர் ஆரம்பிக்க வேண்டிய எழுத்து | | | | |
|---|---|---|---|---|---|
| அசுவனி | சு | சே | சோ | லா | |
| பரணி | லி | லூ | லே | லோ | |
| கார்த்திகை | அ | இ | ஊ | எ | |
| ரோகிணி | ஒ | வ | வி | வூ | |
| மிருகசீசம் | வே | வோ | கா | கி | |
| திருவாதிரை | கு | க | ங | ச் | சா |
| புனர்பூசம் | கே | கோ | ஹ | ஹி | |
| பூசம் | ஹீ | ஹெ | ஹோ | ட | |
| ஆயிலியம் | டி | டு | டே | டோ | |
| மகம் | ம | மி | மு | மே | |
| பூரம் | மோ | ட | டி | டு | |
| உத்தரம் | டே | டோ | ப | பி | |
| அஸ்தம் | பு | ஷ | ண | ட | |
| சித்திரை | பே | போ | ர | ரி | |
| சுவாதி | ரு | ரே | ரோ | தா | |
| விசாகம் | தீ | து | தே | தோ | |
| அனுஷம் | ந | நி | நு | நே | |
| கேட்டை | நோ | ய | யி | யு | |
| மூலம் | யே | யோ | ப | பி | |
| பூராடம் | | பு | த | ப | ட |
| உத்திராடம் | பே | போ | ஜ | ஜி | |
| திருவோணம் | கி | கு | கெ | கொ | |
| அவிட்டம் | க | கி | கு | கே | |
| சதயம் | கோ | ஸ | ஸி | ஸு | |
| பூரட்டாதி | ஸே | ஸோ | த | தி | |
| உத்திரட்டாதி | து | ஸ | ச | த | |
| ரேவதி | தே | தோ | ச | சி | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடாத நாட்களும், ஆகாத நட்சத்திரங்களும்.

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமையில் வரும் | அனுசம், கேட்டை, மகம் விசாகம், பரணி, மிருகசீசம். |
| திங்கட்கிழமையில் வரும் | பூராடம், அனுசம், மகம் பூரட்டாதி, கார்த்திகை விசாகம், சித்திரை |
| செவ்வாய்க்கிழமையில் வரும் | அவிட்டம், திருவோணம், சதயம், கேட்டை, திருவாதிரை, உத்திராடம் |
| புதன்கிழமையில் வரும் | மூலம், திருவோணம், கிருத்திகை, அவிட்டம், அசுவனி, பரணி |
| வியாழக்கிழமையில் வரும் | மிருகசீசம், பூராடம், ரேவதி, புனர்பூசம், பூசம், கேட்டை |
| வெள்ளிக்கிழமையில் வரும் | பூசம், விசாகம், ரோகிணி, அவிட்டம், மிருகசீசம். அஸ்தம், அனுசம், பூராடம் |
| சனிக்கிழமையில் வரும் | அஸ்தம், பூசம், புனர்பூசம், உத்திரம், ரேவதி. |

ஆகிய நட்சத்திரங்களில் செய்யும் காரியங்கள் சிறப்பதில்லை. நல்ல வாய்ப்புகளையும், யோக தன்மைகளையும் தருவதில்லை. முக்கியமாக வீடு கட்டுவது, திருமணம் செய்வது, சாந்தி முகூர்த்தம் செய்வது, பெரிய தொழில் ஸ்தாபனங்களைத் திறப்பது, வியாபாரம் தொடங்குவது கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் கந்தையா இராமநாதன் J. P.**

(தலைவர் - கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை)

பரிபாலன சபையினர்

கொக்குவில், நந்தாவில்,

கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்.

## ஹிருதயபூர்வமான அஞ்சலிகள்



**அமரர் கந்தையா இராமநாதன்**

(தலைவர் நந்தாவில் அம்மன் கோயில்)

அன்னாரின் திடீர் மறைவினால் துயர் அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன் அவர் தம் ஆத்மா அம்பிகையின் பாதக்கமலங்களைச் சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

ச. ஸ்ரீசந்தனக்குருக்கள்

(பிரதமகுரு),

நந்தாவில் அம்மன் தேவஸ்தானம்.

(சி/49456)

## கண்ணீர்ப் பூக்கள்



கொக்குவில் கற்புலத்து மனோன்மணி

அமரர்

**கந்தையா இராமநாதன் (J.P.)**

## கண்ணீர்ப் பூக்கள்



24.03.2006 இல் இறைவனடி சேர்ந்த கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலைய போஷகர்

**அமரர் கந்தையா இராமநாதன் (J.P.)**

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மனோன்மணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மனோன்மணி சனசமூக நிலையமும்

## கண்ணீர் அஞ்சலி




கொக்குவில் - நந்தாவில்

கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர்

**கந்தையா இராமநாதன்**

ஆலய பரிபாலன சபையினர்,

கொக்குவில் - நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்.



# திரு. கந்தையா இராமநாதன் J.P

(ஓவசியர் இராமநாதன்)

(சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பெருந்தெருக்கள் திணைக்களம்)

(தலைவர் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலனசபை)

உங்கள் நினைவுகள்

என்றும்

எம் நெஞ்சில்

உங்கள் ஆத்மா சாந்தியடைய கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாளை பிரார்த்திக்கிறோம்

தீஸ் குடும்பம்.

# கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் பரிபாலன சபைத் தலைவரும், வளர்மதி நிறை வாழ்வகத்தின் போஷகருமாகிய

## உயர்திரு கந்தையா இராமநாதன்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்

அ.பஞ்சலிங்கம் (முன்னாள் அதிபர்)

பெ.கனகசபாபதி (தலைவர் நல்லூர் M.P.C.S)

சி.ஜெயபாலசிங்கம்

ஆ.சத்தியமூர்த்தி

கு.சண்முகநாதன்

செ.நாதன்

வே.கருணாமூர்த்தி

இ.றஞ்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது ஊரின் முன்னேற்றத்திற்கு
உறுதுணை புரிந்தவரும் ஒப்பற்ற
சமூக சேவையாளருமான

### கந்தையா இராமநாதன்

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அவரின் ஆத்மசாந்திக்கும்
பிரார்த்திக்கிறோம்.

(50449)(32-15-45) **கோண்டாவில் மக்கள்.**

## கண்ணீர் அஞ்சலி



### *கந்தையா இராமநாதன்* (JP)

*(ஓவசியர்)*

எமது வளர்மதி நிறைவாழ்வகத்தின் போஷகராகவும், கொக்குவில் நந்தாவில் அம்பாள் ஆலய பரிபாலனசபைத் தலைவராகவும் இருந்ததுடன், பல சமூகசேவை அமைப்புகளில் தன்னை இணைத்து சேவையாற்றிய பழம் பெரும் சமூகத்தொண்டனை இழந்து தவிக்கின்றோம். தள்ளாத வயதிலும் இளம் வாலிபனாக இன்முகத்துடன் சமூகத்திற்கு ஆற்றிய சேவை எம்மால் மறக்கப்பட முடியாதது.

அன்னாரின் இழப்பினால் பெரும் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரிற்கு எமது இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள் சமர்ப்பணம்.

சம்பியன்லேன்,
கொக்குவில். (சி/49642)(11) **கொக்குவில் வளர்மதி சமூகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
28
11
1921



இறப்பு
24
05
2006

## திரு. கந்தையா இராமநாதன் J.P.

(சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பெருந்தெருக்கள் திணைக்களம்.
ஓவசியர் (PWD), தலைவர் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலனசபை)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, கோண்டாவிலையும் 45/23A, பிரட்றிக்கா வீதி, வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமாகிய திரு. கந்தையா இராமநாதன் அவர்கள் 24.05.2006 புதன்கிழமை அதிகாலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா முத்தம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும் செல்வராணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற மயில்வாகனம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் ஸ்ரீ இராமநாதன் (UK), நித்ரா (U.S.A.) உதுத்திரா (U.S.A.), நலிந்திரா (U.S.A.), ரூபா (UK), ரெஜினா (U.S.A.), மகிந்தன் (U.S.A.), குகன் (U.S.A.), அசோகன் (U.S.A.) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மஞ்சுளா, அமுதசாகரன், நாகேஸ்வரி, [illegible], Dr. [illegible], புவனநாயகம், குலாண்டீன், வீணா, Dr. [illegible] ஆகியோரின் அன்பு மாமனாரும் Dr. [illegible], பிரா, மித்திரன், சீதா செந்தில்குமார், [illegible], Dr. அரவிந்தன், ஜோகன், ரேகா, [illegible], [illegible], சிந்தியா, Dr. [illegible], [illegible], சோனியா, Dr. நிரோஜா, [illegible], ரமேஷ், ஆனந், வல்சன், ரதீஸ், நதியா ஆகியோரின் பாட்டனாரும் சதீசின் அன்புப்பூட்டனாரும் குலசேகரம் (சிங்கப்பூர்), [illegible] (மலேசியா), சரஸ்வதி இராசையா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். இறுதிக் கிரியைகள் 28.05.2006 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அவரின் பூதவுடல் பகல் 11.30 மணிக்கு பொரளை கனத்தை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி திருமதி செல்வராணி இராமநாதன், பிள்ளைகள்.

45/23A, பிரட்றிக்கா வீதி, வெள்ளவத்தை. தொ. இல. 2589409

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 • 11 • 1921



மறைவு 24 • 05 • 2006

## திரு. கந்தையா இராமநாதன் J.P.

[illegible]

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் கந்தையா இராமநாதன்

[illegible]
கந்தையா இராமநாதன் அவர்களின்
[illegible]
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடைய அம்பாளைப்
பிரார்த்திப்போம்.

[illegible] கொக்குவில். — [illegible] குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



## உயர்திரு கந்தையா இராமநாதன்

அம்பாளின் அருட்கடாட்சம் பெற்ற நல்லதொரு குடும்பத்தின் ஆலவிருட்சம் அமரர் அவர்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவர் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- [illegible]
[illegible]
[illegible]
[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள்
தேவஸ்தான பரிபாலனசபைத் தலைவர்

# உயர்திரு கந்தையா இராமநாதன்

28 11 1921



24 05 2006

## மனோன்மணியாள் மைந்தன்

நாதம் ஓய்ந்திட
அம்மன் அவள் அணிகலன் இழந்திட
நந்தாவில் நற் தூணொன்றைத் தொலைத்திட
கற்புலத்து மனோன்மனியாள் மகுடத்து
முத்தது உதிர்ந்திட
எம் உதிரம் உறைந்திட .........................!

கொக்குவில் சிறக்க நந்தாவில் தழைக்க
கொலுவிருக்கும் அம்பாளின் அடியானாய்
ஆயுளெல்லாம் பணி செய்து
மனோன்மனியாள் மனம் நிறைந்த மைந்தன் ...................!

வாழ்வாங்கு வாழ்ந்தீர்
வரையின்றி வழங்கி
கற்புலத்தாள் கரையடைந்த
கலங்கரை விளக்கம்
விளங்கும் எந்நாளும்
எம் மனதில் ....................!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல மனோன்மணித்தாயைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

## கொக்குவில் வளர்மதிழ முன்னேற்றக்கழக
## நிறைவாழ்வக போஷகர்
## உயர்திரு கந்தையா இராமநாதன்

மண் மகிழ
28
11
1921



கண் நெகிழ
24
05
2006

## ஓய்ந்தது நாதம்

அசைவற்றன தந்திகள் !
ஆடி ஓய்ந்தன நாளங்கள் !
இனிமையான கண்களில்- மிளிர்ந்த புன்னகை !
ஈகையெனும் தவத்தால்- திரண்டன கரங்கள் !
உற்றவர் மகிழ- உழைத்தன கால்கள் !
ஊரவர் போற்ற- நிலைத்திட்ட குணங்கள் !
எம்மவர் இவர்- என மகிழ்ந்திடும் இதயம் - நீங்கள் !
ஏணிகளே- ஏற்றங்களாய் வாழ்ந்த கணங்களில்
ஐயங்கள் போக்கி- பிறர்க்கு நம்பிக்கை ஊட்டிய ஒளிவிளக்கு நீங்கள்!
ஒவ்வொருநாளும் இல்லறம்பேண - நீங்கள் வரைந்த
ஓவியங்கள்- வாழ்வுக்கு என்றும் நல்ல இலக்கணங்கள் !
ஔடதமாய்- பிறர் துன்பங்கள் - நீக்கி
ஃகுபோல் நிமிர்ந்து நடந்த மானுடம் நீங்கள் !
அனைவர்க்கும் நல்ல அகராதி - நீங்கள் !
மனித குலம் கண்ட மாணிக்கம் நீங்கள் !
ஆலய பரிபாலனம் காத்து, தலைமைப் பதவிகள் தாங்கி
நிறைவாழ்வகம் வாழ நிறைவாக உவந்து ஆசிகள் கூறி
உழைத்திட்ட நன்மகன் நீங்கள் !
சமூகம், சமயம் இரண்டையும்
கண்போல் பேணி வளர்த்து
ஆகுதி ஆகி விட்ட உத்தமரே ! மண்ணுலகும் இன்று
ஒரு கணம் மரணித்தது ! உம்பிரிவால்

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்கள்

சம்பியன் வீதி
வளர்மதி முன்னேற்ற கழகம்
கொக்குவில் வளர்மதி நிறைவாழ்வகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அன்னையின் மடியில் 28 ❋ 11 ❋ 1921

ஆண்டவன் அடியில் 24 ❋ 05 ❋ 2006

## அமரர் உயர்திரு கந்தையா இராமநாதன் J.P
## (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

காலத்துக்குக் காலம் கொக்குவில் மண்ணில் பல நல்லவர்களும் வல்லவர்களும் மலர்ந்து மரணித்து வந்துள்ளார்கள். அவர்களில் ஒருவர் சிவபதமடைந்த கந்தையா இராமநாதன் ஆவர்.

தனது பெயருக்கான சக்தியையும் கீர்த்தியையும் பெற்றவர். கோண்டாவில் கிழக்கின் மண்வாசனையும் அன்பான அரவணைப்பும் அவரை மேலும் உயர்ந்தோங்கி வளரச் செய்தது. இரண்டு ஊர்களிலும் தன்னால் இயன்ற முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர். அவர் பிறந்த மண்ணிலும், புகுந்த மண்ணிலும் புன்முறுவல் பு,ர்த்த முகத்துடனும் கம்பீர நடையுடனும் உலாவி வந்த காட்சி மறக்க முடியாது.

அல்லும் பகலும் உழைத்தவர். உழைப்பால் உயர்ந்தவர். இறுதி மூச்சு அடங்கும் வரை அயராது சேவை செய்தவர். கோண்டாவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக இருந்த காலத்தில் பாடசாலைக்கும் மருத்துவமனைக்கும் தன்னால் இயன்ற சேவையை ஆற்றியுள்ளார். ஆலயங்களினதும் நூல் நிலையங்களினதும் வளர்ச்சிக்கு நன்கொடைகளை வழங்கியுள்ளார். மக்களின் மனமார்ந்த பாராட்டையும் பெற்றவர்.

அமரத்துவமடைந்த பலருக்கு எம்முடன் இணைந்து அஞ்சலி செலுத்தியவருக்கு நாம் அமரத்துவம் அடைந்தவர்கள் வரிசையில் அவரை இணைத்து இன்று அஞ்சலி செலுத்துகிறோம். விளக்கமுடியவில்லை.

அவரை வாழ்வில் நேசித்தோம். இறப்பில் மறவோம். நல்லதை இங்கு விதைத்துள்ளீர். நல்ல அறுவடை அங்கு பெறுவீராக.

அவரின் அன்புமிகுந்த பாரியாருக்கும். பாசமிகு பிள்ளைகட்கும். மருமக்கள். பேரப்பிள்ளைகள். பு,ட்டப்பிள்ளைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மாசாந்திக்காக அருள் ஆட்சி புரியும் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாகபு,ஷணி அம்பாளையும். அரசடி விநாயகரையும். கோண்டாவில்கிழக்கு. உள்ளூர். பிறவு,ர் மக்கள் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கோண்டாவில் கிழக்கு மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப்பூக்கள்



மண் மகிழ
28
11
1921

கண் நெகிழ
24
05
2006

## அமரர். கந்தையா இராமநாதன் (JP)

**(போஷகர், கொக்குவில் மனோன்மணி சனசமூகநிலையம்)**

பண்பாளன்

ஊர்மக்கள் பத்திரிகை வாசிக்க உதவியவரே
மழலைகள் கல்வி பெற்றிட வளம் கொழித்தவரே
இளைஞர்கள் விளையாட்டில் முன்னேற வழிசமைத்தவரே
நிலையத்திற்காய் பல வழிகளில் உழைத்த உத்தமரே
கொடையின் உச்சிதனை தொட்டவரே
சேவை என்பதன் உருவமாய் திகழ்ந்தவரே
பாசம் என்பதை பாங்குடன் ஒப்பித்தவரே
பண்பின் இலக்கண புருசராக விளங்கியவரே
ஆளுமையின் சிகரமாக ஒளி வீசியவரே
உங்கள் புகழ் இப்புவிதனில் என்றென்றும் நிலைக்குமே !

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது சனசமூக நிலையம் சார்பாகவும் பாலர் பாடசாலை சார்பாகவும், விளையாட்டுக் கழகம் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மனோன்மணி தாயை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**மனோன்மணி சனசமூக நிலையமும்**
**பாலர் பாடசாலையும், விளையாட்டுக்கழகமும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்.



குடும்ப அச்சாணியை தொலைத்துவிட்டு

நாம் அல்லல்பட்ட கணங்களில்

எம் துயர்துடைக்க நீண்ட

கரங்களுக்கும் மனங்களுக்கும்

நேரில், அஞ்சலிப் பிரசுரங்கள்,

தொலைபேசி, பத்திரிகைச் செய்திகள்,

தொலைநகல், மலர்வளையங்கள்,

கடிதங்கள் வாயிலாக

எமது சோகத்தை பகிர்ந்த

உற்றார், உறவினர்,

நண்பர்கள், அயலார்

அனைவருக்கும்

மனம் நிறைய

நன்றிப் பூக்களை

காணிக்கையாக்குகின்றோம்.



**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தொலி

1. தென்னாடுடைய சிவனே போற்றி
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி

2. சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க.
பக்திவலையில் படுவோன் காண்க.

3. குவளைக் கண்ணி கூறன் காண்க.
அவளும் தானும் உடனே காண்க.

4. அண்ணாமலை எம்அண்ணா போற்றி
கண்ணாரமுதக் கடலே போற்றி

5. ஏகம்பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி

6. பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி

7. நமப்பார்வதீ பதையே
ஹரஹர மகாதேவா

8. சிற்சபேசா
சிவசிதம்பரம்

9. ஸ்ரீ வல்லீ காந்த ஸ்மரணே
சிவசுப்ரமணியம்


10. ஸ்ரீ லெட்சுமீ காந்த ஸ்மரணே
ஜெயஜெய ராம்

11. கோவிந்த நாமசங்கீர்த்தனம்
கோவிந்தா கோவிந்தா

12. இன்பமே சூழ்க!
எல்ருலோம் வாழ்க் ! (3 முறை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HONOURABLE




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MR. KANDIAH RAMANATHAN ANCESTRY




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் நந்தாவில் கற்புலந்து மனோன்மணி அம்மன் ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு

நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்

*Printed by : Vihadan Printer, 541/2, Galle Road, Colombo - 06. Tel : 2361329, 2504370*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org